KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலா நிலயம்.

V 7. No 36. 13.9.1934.

N211, N28 KN
N34.7.36
199186

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ௵ செப்டம்பர் ௴ 13௳ [No. 36

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 561

2. தமிழ்ப் பாடம்—
நைடதம்—நளன் தூதுச் சருக்கம். 563

3. கம்பராமாயணம் (வாலிவதைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 565

4. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 10-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 568

5. கர்ணன் மாண்பு
K. T. விஜயராகவாச்சாரியார். B.A. 570

6. இரவீந்திரநாதர் கட்டுரைகள் (தபோவனம்)
W. E. அரியநாயகம் B.A., B.D., B. Ed, & ஆஷாதேவி M. A. 573

7. சூளாமணி (குமாரகாலச் சருக்கம்)
வித்துவான் T.P. மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை M. A. B. L. 574

8. வர்த்தமானம் 576

கலாநிலயம்

எத்தைக்கண்டு இச்சை கொள்வோம் 5.

இல்லாததைக் கற்பனைசெய்துவிட்டு இருந்ததையே கண்டுபிடித்திருப்பதாகக் கூறுகிற இப் பொய்ம்மையை உண்மையென மயங்குவதே சில நல்லவர்களும் உயங்குவதற்குக்காரணமாகின்றதென்றுசென்ற நாள் கூறினோம். வில் டூரோன்ட் எழுதிய கடிதத்திற்கு மறுமொழியாக வந்த சில கடிதங்களில், முன்னைய மயக்கத்தைத்தெளிவிக்கின்றேன் என்றுவேறோர்புதிய மயக்கத்தை உண்மையென்று புகுத்துகின்றவிபரீதம் காட்டப்பெற்றிருக்கின்றது. "உண்மையைநாம்கண்டு பிடித்துவிட்டோமே; பின் அதுவே பெரும்பிழையாயிற்றே; அதனால் அல்லவோ இனி மனிதவாழ்க்கைக்குப் பொருளும் பயனும் காணமாட்டாமல் கலங்க வேண்டியிருக்கின்றது.இதுபற்றி உம்கருத்தென்ன?'' என்பது வில் டூரோன்ட் எழுதி யனுப்பிய கடிதத்தின் பிண்டப்பொருள். இதற்குப் பதில்எழுதியவர்களில் ஒருவர் பெர்ட்ரான்ட் ரஸ்ஸல் என்பவர். இவர் இக் காலச் சாத்திரங்களைக் கரைகண்டவர்; ஆழ்ந்த சிந்தனையாளர்; கடவுள்ஆன்மா சமயங்கள்திறத்தில் இவர் ஐயமேகொண்டவர். ஆயினும், "உண்மையைக் கண்டுபிடித்தபிறகு என்ன முடிவிற்கு வரக்கூடுமென்பதை நான் எப்படி முன்னறிந்து சொல்லக்கூடும்; ஏனென்னில் இதுவரையில் "உண்மை" ஒன்றும் கண்டுபிடிக்கப்படவில்லையே" என்றுஉறுதியாக மறுத்துவிடுகின்றார். கார்ல் லேம்மல் (Carl Laemmle) என்னும் வேறு ஒருவர்,

"உண்மையைக் கண்டுபிடித்ததே இந்த மானுடசரித்திரத்தில்செய்யப்பட்ட பிழைகளிலெல்லாம் மிகப்பெரியதெனக் கருதவேண்டியிருக்கிறது—என்று எந்தவாயைக் கொண்டு சொல்லத் துணிந்தீர் என்பது எனக்கு மிகவும் வியப்பாக இருக்கின்றது. இந்த 'உண்மை' எப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டது? இதைப்பற்றிப் பெரியஎழுத்துத் தலைப்புடன் நான் வர்த்தமானப் பத்திரிகைகளில்ஒன்றும் பார்த்ததில்லையே. பற்பலர் தாம் கண்டுபிடித்துவிட்டதாக எண்ணியிருக்கின்ற அந்த 'உண்மை' முழுப்பொய்யாக இருக்கலாம். ஆகையாற்றான் அது நம்மைவிடுவிக்கவில்லை. இப்படி எண்ணி எண்ணித் தங்களையே கொண்டுபோய்ப் படுகுழியில்தள்ளிக்கொண்டுவிட்ட தத்துவசாஸ்திரிகளும் பூதசாஸ்திரிகளும், பாவம், நம்முடைய பரிவிற்கு மிகவும் பாத்திரராகி நிற்கின்றனர்."

என்னக் கூறுவது இந்தச் செய்தியைச் செவ்விதின் வற்புறுத்திக் காட்டுகின்றது. தம் முன்னோர்களைப் பொய்ம்மையில் மயங்கிக் கிடந்த அசடர்கள் என்று அழைப்பவர்க்கு வரன்முறையில் பேரன்மார்கள் பிறப்பார்கள் என்பதை மறத்தலாகாது. இப்படியே வில் டூரோன்டைப் பரிகாசஞ் செய்து பதிலெழுதுகின்றார், எட்வின் ஆர்லிங்டன் ராபின்ஸன் (Edwin Arlington Robinson) என்பவர். இவர் இக்காலத்து அமரிக்க தேயத்துக் கவிவரர்களில் முதன்மையானவர். இவர்கடிதம் முழுவதுமே கருத்துட்கொள்ளத் தகுந்தது:—

"அன்புடைய டூரோன்ட்,

ஆழமும் பயனுமுடைய ஒன்றும் சிறப்பாகநான் சொல்வதற்குஇல்லையாகையால், நீங்கள் கேட்டிருக்கின்றகேள்விகளுக்குப் பதிலெழுத இதுகாறும் தாழ்த்தலானேன். இந்தத் தத்துவசாஸ்த்திரிகளிலும் பூதசாஸ்த்திரிகளிலும் யாராவது ஒருவர் உண்மையைத்தான் கண்டு பிடித்துவிட நேர்ந்துவிட்டால் பிறகு மற்றவர்களெல்லாரும் தம்தம்

கடையை மூடிக்கொண்டு போய்ச்சேரவேண்டியதுதான், என்றுமுன் ஒருசமயம் நான் தத்துவசாஸ்திரி ஒருவரிடம் சொன்ன நினைவு வருகின்றது. இப்பொழுது, உண்மை கண்டுபிடிகப்பட்டாய்விட்டதென்றும், அதனுல் நாம் முன்னிலும் அதிகம் கெடுதியே அடைந்தோமென்றும் கூறுகின்றீர் நீர். இதனைக் கேட்குங்கால் எனக்குக் கோபமும் அவமானமும்உண்டாகின்றன—ஏனெனில் நான் அதனைப்பற்றி ஒன்றுங்கேள்விப்படவில்லையே. சில ஆண்டுகளாக நாம் விஷயசம்பந்தமான அறிவு அதிகம் சம்பாதித்துக் கொண்டிருக்கின்ருேம் என்பதைஒப்புக்கொள்கின்றேன். ஆயினும், உண்மையையே பற்றிய அறிவிலோ, ஒருவரையொருவர் தடியாலேயே அடித்து மண்டைகளை உடைத்துக்கொண்ட நம் முன்னேர்களைக்காட்டிலும் நாம் சிறிதேனும் அதிகங் கொண்டிருக்கின்ருேம் என்று எதனைக் கண்டு இயம்பக்கூடும். உடைந்த மண்டையிலிருந்து தப்பிப்போன ஆன்மா அப்புறம் என்னவாயிற்றென்பதுஅவர்களும் அறிந்ததில்லை நாமும் அறியவில்லை. ஆன்மா இல்லை என்று சொல்வது மிகச்சுலபம், அவ்வாறு சொல்வதுதான் தற்காலம் கௌரவமாகவும் கருதப்படுகின்றது; ஆயினும், ஆன்மா உண்டோ இல்லையோ என்று நிச்சயமாகத் தெரிந்தவர் யார் இருக்கின்றார்?...தற்காலச் சாஸ்த்திர நிபுணர்கள் தாம் கூறுவதே நிச்சயம் என்பது எனக்கு முற்றிலும் பொருளற்றதாகத் தோன்றுகின்றது;அவர்கள் காட்டுகின்ற முடிபை அவர்களே சிறிது சிந்தித்துப் பார்ப்பார்களாயின், அது பொருளற்றதென்பது அவர்களுக்கேயும் புலப்படாமற் போகாது. உலகத்தின் எல்லையைக் கண்டுபிடிப்பதற்குப் புறப்பட்ட வொருவன், மூடுபனி சூழ்ந்திருக்கும்போது ஒரு கல்லின்மேல் ஏறி நின்றுகொண்டு, வேறொன்றுங் கண்ணிற்குத் தெரியாமையால், "இதோ, உலகத்தின் கோடியைக் கண்டுபிடித்துவிட்டேன்; இதற்கப்புறம் ஒன்றுமில்லை" என்று கூவுவதையே இப்பூதசாஸ்திரிகள் தமது உண்மைகளை விளம்புகின்றகொள்கை ஒக்கும்.

இப்படிக்கு
E. A. ராபின்ஸன்."

ஏர்னஸ்ட் டிம்னெட் (Ernest Dimnet) என்பவர், கல்வியும் அறிவும் சிந்தனையும் நிறைந்தஒரு பிரான்ஸ் தேசத்து நூலாசிரியர். சாஸ்த்திர 'உண்மைகள்' என்று இன்றுபேசப்படுமிவை உண்மைகளோ அல்லாதனவாகவே யிருக்க இயலுமென்பதைக் காட்டி இவர் எழுதியிருக்குங் கடிதம் ஆழமுடைய பல கருத்துக்களை எளிதில் விளக்கிக் காட்டுகின்றது. அதனை ஈண்டு மொழிபெயர்த்துத் தருகின்ருேம்:—

"அன்புடைய ரோண்ட்,

சாத்திரங்களெல்லாம் உம்மைக் கொடிய வொரு மாற்ருந்தாய்போல் நடத்தி இருத்தல் வேண்டும். வானசாஸ்த்திரமும் பூமிசாஸ்த்திரமும் உயிர்நூலும் உமக்குத் தத்தம் கதையைச் சொல்லக்கேட்டநீர், இனிஎதனிலும் பக்தியேனும் நம்பிக்கையேனு மன்பேனும் காணமாட்டாதவராயினீர். இவை கற்றுத்தந்த விஷயங்களைக்கொண்டு நீர் உம்முடைய வாழ்க்கைத் தத்துவம் ஒன்றுகட்டிக்கொண்டீர். இப்படி இவைகளைத் தெரிந்துகொண்டவொரு மகிழ்ச்சியோடு சிலகாலம் கழித்துவந்தீர்; இம்மகிழ்ச்சிக்குக் காரணமாயிருந்தவைகளேபிறகுஉமக்குச்சாலக்கொடுமைகள் செய்யத் தலைப்பட்டன. அதனுல், ஊக்கத்திற்கு மாருகச் சோர்வே விளைவிக்கின்ற இந்தவிஷயங்களை அறிந்ததால் என்னபயன் என்றயிர்த்தீர்? கொடிய சக்திகள் பொருதுமடியும்ஒரு போர்க்களமேஇப்பிரபஞ்சம் என்னுமிதனைத் தெரிந்துகொள்வதைக்காட்டிலும் யாதும் கல்லாதிருந்திருத்தலே நலமெனக்கருதுகின்றீர். நமதுமுன்னேர் நம்மினும் பன்மடங்குஇன்பமுடையவராயிருந்தனராதலால், விஷயஅறிவுகுறைந்தாற்ருன் ஒருவனுக்குஇன்பம்அதிகமாகக்கூடும் என மதிக்கின்றீர். அறிவினுல் அயர்ந்து பலபடி வேதனைப்படுவதைவிட ஒருவன், இவ் விஷயஅறிவு ஒன்றையும் நாடாமல், தனது சின்னுள் வாழ்க்கையைச் செலுத்திமுடிவதே கோடிபெறும் என்று எண்ணுகின்றீர்; தன்னுடைய மனோபாவனையினுலும், தன்னைச் சூழ்ந்திருக்கின்ற உலகத்தினேடு அவன்கொண்டுள்ள ஒற்றுமையினுலும், பதில்சொல்லமுடியாத கேள்வியொன்றும் பண்டைக்கால மனிதன் கேட்டதில்லை என்பதை அறிந்துள்ளநீர், அவன் ஆராய்ச்சி செய்துசெய்து அயர்வதே கடனுக முடியாமல், அவன் ஆயுளில் அந்த அந்த நிமிடம் அவனுக்கு அதனதன்வரையில் போதுமானதாக வாழ்ந்த நலத்தினை நினைத்துப் பொருமைகொள்கின்றீர். அந்த அமைதிக்கு எதிர், புத்தியின் இந்தப் பரப்பரப்பெல்லாம் என்னபயன் என்று ஏங்குகின்றீர். இதுதான் உமது தற்கால நிலைமை, அல்லவா?

இந்தப் பூதசாத்திரஆராய்ச்சிகள் உண்மைபோல் காட்டுகின்ற இவைகளே முற்றி முதிர்ந்த முடிவின் கோடிகள் என்று நீர்கொள்வதாற்ருன், நம்பிக்கையற்ற வொரு வியாகுலத்தில் ஆழ்ந்திருக்கின்றீர். அரை குறையாக இவை கற்பிக்கும் அறிவினிற்கும், சோதித்து முற்ருமுன் இவை கூறுகின்ற முறைகளுக்கும் ஆளாகமல் உம்மைக் காத்துக்கொள்ளாமற்போயினீர். இத்தகைய அறிவையும் முறையையும் நீர் உண்மை என்று ஒருபோதும் அழைத்திருக்கலாகாது. இந்தப் பூதசாத்திரமுடிவுகளை நிச்சயமாகக்கொண்டதே இக் கையறவுடைய துன்பத்தைப் பிறப்பித்தது. மனிதர் பண்டைக்காலத்தில் நம்பியிருந்தவைகளை நீர் நம்பாமல் ஐயப்பட்டதுபோலவே, இவ்வுண்மைகள்தாம் உண்மையோவென இதன்திறத்திலும் சந்தேகங்காட்டியிருப்பீராயின், பண்டைய நம்பிக்கையில் ஒருசிறு பாகமேனும் எஞ்சியிருக்கும். பக்தியுடன் கலவாமல் இப்பிரபஞ்சத்தில் நம்பிக்கை வைத்தலரிது.

உயிர்வாழ்க்கை எனக்குஎன்னசெய்துவைத்தது என்று கேட்கின்றீர். சுயநய நோக்கங்களிலினின்று விடுவித்துக்கொண்டு பிறர்பொருட்டு முயல்வதற்கு எனக்குச் சிற்சில சந்தர்ப்பங்கள் வாய்த்தன. இதுபற்றி நான் மிக்க நன்றியுடையவனுக இருக்கின்றேன். முதலில் நாம் ஒன்றினை நம்பினுலன்றி அதன் தன்மையை அறிந்துகொள்ள இயலாதென்று பெரியோர் சிலர் சொல்வதுகேட்டு நான் ஒரு காலத்தில் பரிகசம் செய்ததுண்டு. நான் ஆராய்ந்து அறியாமுன் ஒன்றையும் நம்பமாட்டேன் என்று எதிர்த்துக் கூறுவேன். ஆயினும்,அறிந்தபின் நம்புவது என்னும்இது எத்துணை அவலச் செய்தி என்பதை என்னுடைய உலகானுபவம் எனக்கு மெல்ல மெல்லக் காட்டித்தந்தது. இப்பொழுது, என் நம்பிக்கை அறிவதற்கு ஆதாரமாகவும், அறிவு நம்புவதற் காதாரமாகவும் ஒன்றை ஒன்று உதவி வளர்க்கின்றன. இதன் பயன் என்னவென்ருல்—மனதிற் சாந்தியும் வாழ்க்கையில் அமைதியுமாம். நீவிரும் இவ்வகை அமைதியை ஒருநாள் அடையாமற் போகமாட்டீர். உங்கள் கடிதத்தில் காண்கின்றபடி நீங்கள் கொண்டுள்ள அல்லலின் வேகம் எத்தனைகாலம் தாங்கமுடியும்.

இப்படிக்கு
ஏர்னஸ்ட் டிம்னெட்

ஆதலின், கடவுளென்றும் மதமென்றும் முன்னேவீணுக மயங்கினுர் மனிதர் என்று விலக்கி அதற்கு மாருக இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருப்பவைகளை உண்மையென்றுகொண்டாடுகின்ற மயக்கத்தினின்று தெளிவதன் அவசியமானது இன்று எத்துணை அதிகமாக இருக்கின்றதென்பது புலப்படுதல் வேண்டும். உண்மைக்கும் மெய்ம்மைக்குமுள்ள வேற்றுமையை உணர்ந்தால் பெரும்பா [illegible] விட

m211, m28 k14
N34.7.M.
199186

லாம். மெய்ம்மைஎன்பது முழுமையின் இலக்ஷணம்; உண்மை யென்பது பற்பல பாகங்களின் தனித்தனியான பற்பலவகைத்தோற்றம். இத்தகைய தனித்தனி தோற்றங்களின் உண்மையே, அவை உள்ளவாறு அறியப்பட்ட போதிலும், முழுமையின் இலக்ஷணமாகிய மெய்ம்மையாம் என எண்ணலாகாது. முழுமையை மனத்தினுட் கொள்ளாமல் பாகத்தைமாத்திரம் தனித்தனி கருதுவதே விளைகின்ற தீமைகளத்தனைக்குங் காரணம். "நீயே முழுமையா யிருக்கக் கூடுமாயின் இரு, அல்லது முழுமையைக் கலந்துகொள்" என ஜர்மன் கவிவரர் கீதே இயம்பிய மொழிகள் எல்லோர் இதயத்திலும் இறங்கவேண்டும்.

இப்படி, முழுமையை மனத்தினின்று நீக்கிவிட்டுப் பாகத்தைக் கைப்பற்றி வாழமுடியுமோ என்பதுதான் இப்பொழுது எல்லாவற்றிலும் முக்கியமாகக் கேட்கப்படவேண்டிய கேள்வி. மனிதவாழ்க்கையை, ஆன்மவாழ்க்கை யென்றும் உடல்வாழ்க்கை யென்றும் பிரித்துநோக்குகிற பிழையும், ஆன்ம உண்மை உலகஉண்மை என்று பேசும் பேதைமையும், இவையனைய பிற மாறுபாடுகளும் பீடிப்பதெல்லா மக்கேள்விக்குரிய விடையின்முன் எதிர்நிற்க மாட்டாமல் பறந்துபோம். இந்தக்கேள்வியையே இன்னும்சுலபமான வாசகத்தில் கூறலாம் - கடவுள் இல்லாமல் மனிதர் தம் உயிர்வாழ்க்கையைச் சகித்திருக்கமுடியுமா? இந்தக்கேள்விக்கு அவரவர் தம் அறிவினுலும்அனுபவத்தாலும்ஆன்ருேர் உரைத்திருக்கும் உயரியநன்மொழிகளின் உண்மையாலும் தக்க விடை தேர்ந்துகொள்ளட்டும். பின் அரசியல்அமைப்பு முதல், அடுத்தவீட்டுச் சுவரின் உயரம்வரையிலும், எவ்விதக் கேள்வியும் எழுந்திடாது. கடவுளும் கடவுளைச் சார்ந்த சமய நெறிகளும் ஆதாரமாகவில்லையெனில் மனிதவாழ்க்கை மாய்ந்துவிடும்என்றே சரித்திரங்களும்காட்டுகின்றன. வில் டூரான்ட் எழுதிய நூலினுள் காணப்படும் பின்வரும் வாக்கியங்கள் கருத்துட் கொள்ளத்தக்கன:—

This jolly riot of sex, so pleasant to the individual and so hazardous to the race, is bound up, no doubt, with the decay of supernatural belief; and we are engaged at the moment in a gigantic experiment with the possibility of maintaining social order and social vitality through a moral code resting solely on the earth, and shorn of these supports which once suspended it from the skies. That experiment failed in Athens, and it failed in renaissance Italy. Apparently it is dangerous to the race to emancipate the individual; destroy his delusions and the villain ceases to breed. This process has already undermined the Anglo-saxon leadership of America in literature, morals, and municipal politics: as it goes on, the same process will probaby weaken all the peoples of Western Europe and North America. In the interim we shall, in all likelihood, have a cultural outburst like that of Florence and Rome in the days of the Medici and Borgias. In the end we shall be an extinct volcano, and Asia will mount again the throne of the world, until it, too, becomes very intelligent and dies.

தமிழ்ப்பாடம் 136.

நைடதம்—நளன்தூதுப் படலம்

[548-வது பக்கத் தொடர்ச்சி]

விழைவெனும் பாகெறிந் தமரர் விஞ்சையாந்
தழைமுக படாத்தமை தறுகண் வாரணம்
கழைமத னியற்றிய கருங்கண் மங்கைய
ரழகெனும் படுகுழி யாழ்ந்த தில்லையால். 38.

(உரை) விழைவு எனும் - ஆசை என்னும், பாகு - பாகனை, எறிந்து - தள்ளிவிட்டு, அமரர் - தேவர்கள் உபதேசம் செய்த, விஞ்சை ஆம் - மாலிகாஞ்சனம் என்னும் மந்திரமாகிய, தழை - தழைத்திருக்கின்ற, முகபடாத்து - முகமூடியினுல், அமை- அமையப்பெற்றிருக்கும், தறுகண் - அஞ்சாமையை உடைய, வாரணம் - யானையானது, கழை - கரும்புவில்லைத் தாங்கியிருக்கின்ற, மதன் - மன்மதன், இயற்றிய - இயற்றிவைத்திருக்கும், கரும் கண் - கரிய கண்களை உடைய, மங்கையர் - மாதர்களின், அழகு எனும் - அழகு என்று சொல்லப்படும், படுகுழி - பள்ளத்தில், ஆழ்ந்தது இல்லை - விழுந்துவிடவில்லை.

விரிவுரை:— யானைபிடிப்பவர்கள் பழகிய வொரு யானையின் துணைகொண்டு புதிய யானையை வஞ்சித்து அழைத்துவந்து, தோண்டிவைத்திருக்கும்படுகுழியில் வீழ்த்துவர். இப்பாட்டில் நளன் யானையாகஉருவகம் செய்யப்பெற்றுளான். யானையைச் செலுத்துவதற்கு ஆன பாகன் இங்கு ஆசை. அந்த நளனுகிய யானைக்குத் தேவர்கோன் அருளிய மாலிகாஞ்சன மந்திரம் முகபடாம் ஆயிற்று. ஆனுல் இந்த யானை, வஞ்சித்து அழைத்துச் செல்லும் பாகனுகிய ஆசையை எறிந்துவிட்டது. ஆகவே காமன் அகழ்ந்துவைத்த மாதரார் அழகெனும் படுகுழியில் அத்தறுகண் வாரணம் வீழவில்லை. மங்கையர் அழகில் நளன் மயங்கிவிடாமல், தன் கருமத்தையே கருதிச் சென்ருன் என்பது இப் பாட்டின் கருத்தாகும்.

விளங்கிழை யொருத்திபே ரணியில் வேந்தெழி
றுளங்கலு மதிசயந் தோன்ற நோக்கினுள்
வளங்கெழு புகழினுன் மறையக் காண்கிலா
ளுளம்புகுந் தொளித்ததவ் வுருவென் றெண்ணினுள்.

(உரை) விளங்கு - பிரகாசம்பொருந்திய, இழை- ஆபரணத்தை அணிந்த, ஒருத்தி - ஒருமாது, பேர் அணியில் - தனது சிறந்த ஆபரணத்தில், வேந்துஎழில் துளங்கலும் - நளனுடைய அழகிய உருவத்தின் நிழல் அசையக்கண்டு, அதிசயம்தோன்ற-ஆச்சரியமடைந்து நோக்கினுள் - (இவ்வுரு உடையவன் யாவன் என்று அறியப் பின்புறம் பார்த்தாள்; ஆனுல்) வளம்கெழு- வளமை பொருந்திய, புகழினுன் - புகழை உடையவனுகிய நளன், மறைய-(மந்திரவன்மையால்) மறைந்துபோக, காண்கிலாள் - அவனைக் காணவில்லை.(காணப்படாமற் போகவே) அ உரு - அந்த உருவம், உளம் புகுந்து - தன் மனத்திற்குள் சென்று, ஒளித்தது - ஒளித்துக்கொண்டது, என்று எண்ணினுள் - என்று நினைத்தாள்.

விரிவுரை:—இச்செயுளிலும் இதனுடன் தொடர்புடைய மற்றச் செய்யுள்களிலும் இந்தக் கவிஞர்பெருமான் நிகழ்த்திக்காட்டுகின்ற இயங்குசித்திரங்களை ஊகித்துணர்வதற்கு மனோபாவம் சிறிது வேண்டும். இந்திரன் தந்த அம் மாலிகாஞ்சனமந்திரத்தை நளன் மனத்தகத்தே நினைத்திருக்கும்வரை அவன் உருக்கரந்திருப்பதும், அயர்ந்தானேல் வெளிப்படுவதும் ஆதல் வேண்டும். இங்குத் தமயந்தியின் நினைவாலோ மற்றச் சூழலின் எழிலினாலோ ஒவ்வோர்வேளை மந்திரத்தின் மனனம் சோர்வதுமாகலாம். விளங்கிழை இவட்குப் பின்னேவந்த நளன் மந்திரத்தை மறந்ததனால் அவன் உருத் தோன்றியிருத்தல் வேண்டும்; தோன்றிய அவனதுவடிவின்நிழல் இவளதுபேரணியில் துளங்கிற்று; தோன்றலும் அதுகண்ட அவள் அந்நிழற்படிவத்தின் அழகினிற்குத் தன்உள்ளத்தைக் கொள்ளைகொடுத்துவிட்டாளானாலும் "கன்னிக் காவலுடை இச்சூழலின்கண் என்னே ஓர் அரசச்செம்மல் வந்திட்ட"தெனும் அதிசயத்தினுடன் இந்நிழலிற்கு மூலமாகிய புருடன் எக்குமரன் என்றுகாணப் பின்புறம் திரும்பலானாள். இவ்வாறு இவள் திரும்புகின்ற முயற்சியினைநோக்கிய நளன் தன்னறிவு எய்தி மந்திரத்தினில் மீண்டும் தன் மனத்தைச்செலுத்தியதால் அவனதுஉருவம் மறைந்துபோயிற்று. ஆதலின் திரும்பிநோக்கிய இவள் கண்களுக்கு யாதும் புலப்படவில்லை. ஆதலின் வியப்பும் அயிர்ப்பும் உற்றவளாய் மீண்டும் அந்நிழல் உளதோ எனத் தன்து அணியினுள் நோக்கினாள், அங்குமில்லை. பின்னிது என்னையிற்றென்று ஆராய்வாளாகி முடிந்ததோர் முடிவை 'உளம்புகுந் தொளித்தது இவ்வுரு' வென்று அவள் எண்ணினாள்எனக் கவி கூறுகின்றார். நேராகவேனும் நிழலாகவேனும் ஒருமுறை கண்டக்கால் பின்எந்நாளும் மறக்கலாகாப்பேரழகுடையவன் நளன். அப்பெண்ணின் மனத்துள்ளே இப்பொழுது அவ்வுருவம் நீங்காமல் நிற்கின்றது. அணியின்பாற் கண்ட அவ்வுருவையே இப்பொழுது அவள் தன் உளத்துள்ளே துளங்கக் காண்கிறாள். ஆதலின் முன் இழையினுள் விளங்கிய அவ்வுரு இப்பொழுது தன் இதயத்துள் புகுந்து ஒளித்தது என்பது அவளுக்கு உறுதியாயிற்று.

உருவெளி யாகயான் கண்ட வொண்ணுதல்
மருமலர் மாலிகை வனைந்த தென்னென
வரசனு மெண்ணின னவளுஞ் சூட்டிய
தெரியல்காண் கிலனெனத் தெருமந் தாளரோ 40.

(உரை) உருவெளியாக - உருவெளித்தோற்றமாக, யான் - நான், கண்ட - பார்த்த, ஒள் நுதல் - பிரகாசம்பொருந்திய நெற்றியை உடைய தமயந்தி, (இப்பொழுது) மரு - வாசனை பொருந்திய, மலர்மாலிகை - மலர்மாலையை, வனைந்தது என் - எனக்குச் சூட்டியது என்ன அதிசயம், என - என்று, அரசனும் - நளமகாராஜனும், எண்ணினன் - எண்ணி வியந்தான். அவளும் - தமயந்தியும், சூட்டிய - தான் சூட்டின, தெரியல் - மாலையானது, காண்கிலன் - நான் காணவில்லையே, என - என்று, தெருமந்தாள் - வியப்புடன் சிறிது கலங்கலானாள். (அரோ - அசை).

விரிவுரை:—கருத்துமுற்றத்தோய்ந்திருக்குங் காதலின் ஆர்வத்தால் நீங்கானினைவின் பயனாய உருவெளி இவ்விருவருக்கும் இடைவிடாமல் தோன்றிக்கொண்டிருப்பது இயற்கையே. முன் னோர்முறை உருவெளியைத் தமயந்தி என மயங்கி வெள்கியுள நளன், இங்குத் தமயந்தியை உருவெளியென்று மாறிமயங்கலாயினான். மாலிகாஞ்சன மந்திரமும் அவன் மனத்தைவிட்டகன்றது. உடனே தமயந்தி கண்களிக்கத்தானேயாய் முன்னின்றான். அன்னம் சொன்ன பேரெழில் நளனை உன்னவுன்ன முன்தோன்றும் உருவெளிக்கு மாலை சூட்டிச்சூட்டி மகிழ்வதும், ஆதாரமில்லாமையால் கீழேவிழும்மாலையைக்கண் டிரங்குவதுமாயிதுகாறும் பயின்றுள்ள தமயந்தி இன்றும் உருவெளியென்று நினைத்துத் தன்முன் தோன்றிய நிடதவேந்தனுக்கு மாலையைச் சூட்டினாள். ஒருநாளுமில்லாதபுதுமையாயின் றுருவெளித்தோற்றமேயாகிய இக்காதலிமாலையும் சூட்டுமோவென வியப்புடன்ஐயுற்று மந்திரத்தைநினைத்த மன்னனுருவம்மறையலாயிற்று; மாலையும் அவனோடு மறைந்தது. உருவெளி மறைதற்கு உரியதே; ஆனாலோ, உருவெளிக்குத் தான் சூட்டிய மாலை வீழாது நின்றதுமன்றி மறைவது மெங்ஙனம் எனத் தமயந்தி சாலத் தயங்கலானாள். முன்னர் உருவெளியை மெய்யான தமயந்தி யென்று மயங்கி, உரையாடவும் புக்க இவ்வேந்தன் தனக்கு மாலைசூட்டிய மெய்யான தமயந்தியைஇப்பொழுதுஉருவெளியேயென்று கொண்டான். 'காதலர்பேதைமைஇன்னவாறு' என்று காட்டும் கவிவரர், நாம் பாடத்திற்குஎடுத்துக்கொண்டிருக்கின்றஅடுத்த செய்யுளிலும் தொடர்ந்துஅந்தப் பேதைமை போந்தூரம் ஈதெனக்காட்டுகின்றார். உருவெளியை மெய்யென மயங்குகின்ற மயக்கவணி இலக்கியங்களில் உளது. ஆனால், மெய்யை உருவெளியென்று மயங்கும்படி செய்யும் இம் மயக்கவணியோ பொதுவற நிற்கின்றது.

முருகவிழ் குழலினா டனையு முன்னுறு
முருவெளி யெனவிறை யுவந்து புல்லினா
னரிவையு மன்னவா றெண்ணி யாங்கெதிர்
புரவலன் மார்புறப் புல்லினா ளரோ.

(உரை). முருகு - தேனை, அவிழ் - சொரிகின்ற, குழலினாள் தனையும் - கூந்தலை உடைய தமயந்தியையும், இறை - மன்னவன், முன்உறும் - தன்முன்னே அடிக்கடி தோன்றலாகின்ற, உருவெளியென - உருவெளித் தோற்றமென்று மதித்து, உவந்து - மகிழ்ச்சியுடன், புல்லினான் - அணைத்துத் தழுவினான்; அரிவையும் - அத்தமயந்தியும், அன்னவாறு எண்ணி - நளன் மயங்கியதுபோலவே மெய்யான நளனை உருவெளி என்று எண்ணி, ஆங்கு - அவ்விடத்தில் தோன்றலான, புரவலன் - மன்னனது, மார்பு உற - மார்பிலே பொருந்த, எதிர்புல்லினாள் - அணைத்துக்கொண்டாள்.

விரிவுரை:—உருவெளியைப்புல்லினால் எதும்தவறில்லை என்ற நினைவில் இருவரும் துணிந்து புரிந்ததோர் விழைவின் திருவிழா விது. நளன், தானே நிஜம் தன்முன் தோன்றிய மங்கையோ பொய்த்தோற்றம் என்றெண்ணினான்; தமயந்தியும் இப்படியே மதித்தனள்; தழுவி யணைத்துத் தம்முள் மகிழ்ந்த மகிழ்ச்சியும் மெய்யே.

பொன்னடிப் பூஞ்சிலம் பொலிப்ப மேகலை
யின்னரிக் கிண்கிணி யிகலி யார்ப்பெழ
மின்னடை கற்பது போன்று மெல்லெனத்
தன்னமர் கோயிலுட் டைய லெய்தினாள். 42.

(உரை). பொன் - பொன்னால் ஆகிய, அடிப் பூம் சிலம்பு - அழகிய பாதச்சிலம்புகள், ஒலிப்ப - சப்திக்கவும், மேகலை - மேகலை என்னும் ஆபரணத்தில் கட்டியுள, இன் - இனிமையான சப்தம் தரும், அரி - பருக்கைக் கற்களை உடைய, கிண்கிணி - சதங்கைகள், இகலி - ஒன்றுடன் ஒன்று மோதுவதால், ஆர்ப்பு எழ - ஓசைசெய்யவும், தையல் - தமயந்தி, மின் - மின்னலானது. நடை கற்பது போன்று - நடக்கப் பழகுவதுபோன்று, மெல்லென - மெதுவாகநடந்து, தன் - தனது, அமர் கோயில் - இருப்பிடமாகிய கன்னிமாடத்தை, எய்தினாள் - அடைந்தாள்.

விரிவுரை:—பொழிலின்கண் இவ்வண்ணம் சுவையுடைச்செய்திகள் சிற்சில நிகழ்ந்தபின் தமயந்தி தன்னுடைய மாளிகையை எய்தினாள். மின் நடைகற்பது போன்று, என்பது இல்பொருளுவமையணி.

மண்டமர் கடந்தவே னளன்வந் தானெனத்
தொண்டைவாய் மடந்தையர் நாளும் சொல்வன
பண்டரு மொழிக்கிளி பயின்று கூறலும்
கண்டதோ விஃதெனக் காளை யெண்ணினான். 43

(உரை) மண்டு - நெருங்குகின்ற, அமர் - போரை, கடந்த - கடந்ததான, வேல் நளன் - வேலாயுதத்தைத் தாங்கும் நளன், வந்தான் - வந்துவிட்டான், என - என்று, நாளும் - எப்பொழுதும், தொண்டைவாய் மடந்தையர் - கொவ்வைக்கனிபோன்ற சிவந்த வாயை உடைய மாதர், சொல்வன - சொல்லித் தமயந்தியைப் பரிகசிப்பதை, பண் தரு மொழிக் கிளி - இசையைத் தரும் சொல்லையுடைய கிளி, பயின்று - பழகி, கூறலும் - (நளன்வந்துவிட்டான்) என்று கூறவும், காளை - நளன், கண்டதோ இஃது - இது தன்னைக் கண்டுவிட்டதோ, என - என்று, எண்ணினான் - எண்ணலானான்.

விரிவுரை:—தமயந்தியைத் தொடர்ந்து நளனும் உடன்சென்று மாடத் துட்புற மடைந்தனன். அன்னம் நளனைப்பற்றித் தமயந்தியிடம் உரைத்த வன்றுதொட்டே, அவள் தோழியர் 'நளன்வந்துவிட்டான்' என்று கூறிக் குறும்பு புரிந்துவந்தனர் போலும். இச்சொற்களைப் பலநாட்களாகப் பயின்றுள்ள இக்கிளி, இன்றுதமயந்தி கோயில்எய்தியதும், தோழியர் மொழியுமுன், 'வந்துவிட்டான் நளன்' என்று விரைந்து மொழிந்தது. கன்னிமாடச்செய்தி அறியாத நளன் 'இக்கிளி தன்னைக் கண்டுவிட்டதோ' என்று ஐயுறவு எய்தினான்.

உருக்கரந்திருந்த நளனை ஒருவருங் கண்டாரலர். கிளியுங் கண்டிலது. ஆயினும், தோழியர்தம் பரிகசமொழியைப் பயின்று கூறிய இக் கிளியின் மொழி இது இப்பொழுது உண்மையே. இவ்வண்ணம், உண்மையை ஓராமல் உரைக்கும்படி அமைக்கின்ற திறமையை 'ஓராதுரைத்தலணி' எனப் புனைந்தழைக்கலாமென முன்னர் இவ்விதழ்களில் கூறியிருப்பதையும், அதற்கு இச்செய்யுளை உதாரணமாய் எடுத்துக்காட்டியிருப்பதையும் இங்கு நினைவிற் கொள்ளவும்.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—7. வாலிவதைப் படலம்

[555-வது பக்கத் தொடர்ச்சி]

தானே தனக்கணி யாகிய வருமை.

வாலியின் வாசகம் இன்னும் முடியவில்லை. இராமனே இது செய்தனன் என்பதை நினைக்க நினைக்க ஆற்றாமல் பின்னும் பின்னும் பன்னுவான் —

வீர மன்றுவி தியன்று மெய்ம்மையின்
வார மன்றுநின் மண்ணினுக் கென்னுடல்
பார மன்றுப கையன்று பண்பொழிந்
தீர மன்றிது வென்செய்த வாறுநீ

[இச்செய்கை வீரம்ஆகாது; நீ இதனைச் செய்யவேண்டுமென்ற விதி எங்கும் இல்லை. இதுசத்தியத்திற்குச்செலுத்தவேண்டிய கடனும் அன்று. உன்னுடைய மண்ணுக்கு என் ஒருவனுடைய உடல்இருப்ப ததிகம் பாரமாகிவிடவில்லை. உனக்கு நான் பகைவன் அல்லன். அவ்வாறாக, உன்னுடைய பெருமையை ஒழித்து இரக்கமற்ற இதனைஎதற்காகச் செய்தாயோ.]

இராமன் புகுந்தொரு வீரமல்லாததைச் செய்ததற்கு வியப்பதோ மற்று, ஈரமில்லாததைச்செய்ததற்கு இரங்குவதோ என ஊசலாடுகின்றது வாலியின் உள்ளம். இதற்கிடையே, இராமனது செய்கைக்கு யாதேனும்ஒருகாரணம்அமைதியுறக்காணவேண்டுமென்றே உழைக்கின்றானிவ் வாலி. ஒன்றுங் கிடைக்காமையே இப்போழ்திவன் கொள்ளுங் குறை. மேனாட்டுச் சட்டமுறையில், "அரசன் குற்றஞ் செய்யக்கூடியவன் அல்லன்" (The king can do no wrong) என்றவோர் விதியிருக்கின்றது. அரசன் எது செய்யினும் அது அறமே என்பது அவ்விதியின் பொருள். இந்தக்கொள்கை, அரசு நடைபெறுவதற்கு இயலும்படி புனைந்துகொண்டவோர் கற்பனையே (fiction)யன்றி வேறன்று. இராமனை அவன் செய்த குற்றத்தினின்று காக்கும்பொருட்டு இன்னதோர் கற்பனையை வாலி கூவிக்கொண்டானோ யாதோ! பொய்யாய அவ்விதியினாலேனும் இராமனை மெய்யனாக்கினாற் போதுமென முயல்கின்றான். அதுவும்இயலவில்லை. ஏனெனின், இராமன் இப்பொழுது அரசனல்லன். ஆவதெனின் அம்மரபு மண்ணாள் வேந்தருக்கே உரியதாகும். "ஏ, இராம, நீதானோர் அரசனாக இருக்கலாகாதா, இருப்பாயேல், 'அல்லவை செய்யலாற்றான் அரசன்' என்னும் அக் கற்பனைமரபு கொண்டேனும் யானோர் அமைதியடைவேனே. அம்மண்ணையுந் துறந்து நிற்கின்றாயே' எனத் தன் மனத்தின் வருத்தத்தைப் பரிகசம்போல் மாற்றி "நின் மண்ணினுக் கென்னுடல் பாரமன்று" எனப் பகர்கின்றனன். "நின் அழகிற்குப் பட்டாடை இல்லாமை யொன்றே குறை" என்ற வழக்கேபோல் "நின் மண்ணினுக்கு" என்பதுஇங்குஅஃதின்மையை எடுத்துக்காட்டுகின்றதென்பதி லையமில்லை. இராமன் அரசனல்லன். ஆதலின், தான்ஆற்றுவது அறம் என்னும் மரபில் மறையமாட்டாமைபற்றி, ஏனைய மனி

தரைப்போல் அறத்தினையேஆற்றியிருத்தல்வேண்டும். மற்று, அவ்வாறு செய்திலன்; ஆதலின்,

இருமை நோக்கினின் றியாவர்க்கு மொக்கின்ற
அருமை யாற்றலன் றேவறங் காக்கின்ற
பெருமை யென்பதி தென்பிழை பேனல்விட்
டொருமை நோக்கி யொருவற் குதவலோ

[இருதிறத்தையும் ஆராய்ந்து நடுநிலைநின்று அனைவர்க்கும் சமமானதை அரிதின் செய்வதன்றோ அறத்தைக் காக்கின்றபெருமை எனப்படுவது. இது என்பிழை என்று ஒன்று உரைத்தற் கிருக்குமாயினும், அதனை விலக்கி என்னைக் காப்பதுவிட்டு, ஒருதிறத்தையே பார்த்து,அவனுக்கு உதவிசெய்தலோ, (அறம்)]

என்று வாலி கேட்கின்றனன். "நீ பிழை செய்தாய், ஆதலின் நின்னைக்கொன்றேன்காண்" என இராமன் எதிர் விளம்புவான் என்பதை முன்னோக்கிய வாலி உரைத்த மாற்றமா மிது. "என் தம்பியின் தாரத்தை நான் வெளவினேனென இதனைச் செய்தனையாயின், அவனுந்தான் என் அரசினை வெளவினு னென்பதை மறக்கலாமோ. எம்மிருவரில் அவன்செய்த பிழைக்கு மாருக அவனுக்கு உதவி, நான் செய்த பிழைக்கு ஈடாக என்னைக் கொல்லலோ அறம்" என்றவினவுங் கால், தானோர் பிழைசெய்ததுஉண்டென ஓவ்வினன் வாலியென்று கொள்ள லருமை. "என்பாலெப்பிழை கண்டாயப்பா" என்று முன்னிவன்கூறியதே இவன திண்மையான மன நிலையைத் தெரிவிக்கின்றது.

அரசநீதியும் அன்று, ஆண்மகன் அறமும் அன்று. "பகையினில் எல்லாம் பண்புடைத் தாமே"(all are fair in war) என்ற அச்சிறிய முறையில் அடக்கலாமோவென்னின், தான் பகையுமன்று. அதனினும் சிறுமைத்தாய முறையொன்றுஉளது. இதனைச் சுய அவசியம் (expediency) என்னலாம். தானுற்ற இடுக்கணைத் தீர்த்துக்கொள்வதற்கு ஓரோவழி ஒருவன் முறையலசெய்தானெனின் அதனைப் பெரியதோர் குற்றமாகப் பாராட்டலாகாது என்னும் நினைவில் அமையலாமோ வென்றாலும் அதுவும் அமைவதற்கில்லையே. ஏனெனில்,

செயலைச் செற்றப கைதெறு வான்றெரிந்
தயலைப் பற்றித்து ணையமைந் தாயெனின்
புயலைப் பற்றுமப் பொங்கரி போக்கியோர்
முயலைப் பற்றுவ தென்னமு யற்சியோ

[உன் காரியத்தைக் கெடுத்த பகைவனை அழிக்கும்பொருட்டு ஆலோசித்து வேறொருவனை (கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவனாகிய நீ) துணைகொள்ள நினைத்தாயென்றால், இடிக்கின்ற மேகத்தைத் தன் எதிரியெனமதித்துக் கோபமுடன் பாய்ந்து எழுகின்ற சிங்கத்தை விட்டு ஒரு முயலைத் துணையாகக்கொள்வது என்ன ஊக்கமோ]

என்று அவ்வமைதியும் பொருந்தாமல்அயரவேண்டியிருக்கின்றது. தன்னைத் துணைகொண்டிருந்தால்அவ்விராவணனை ஒருகணத்தில் இராகவனுக்கு முன்னே கொணர்ந்து நிறுத்தியிருப்பான் இவ்வாலி. அந்தப் பயனையும் இழந்தனன் இராகவன். எனின், எவ்வகையிலும் இராமன் செய்கையைப் பழியினின்று காக்குமாறில்லை. ஆதலின்,

காரி யன்றக ளங்கநிறத் தொன்மை
ஊரி யன்றம திக்குள தாமெனச்
சூரி யன்மர புக்குமோர் தொல்மறு
ஆரி யன்பிறந் தாக்கினை யாமரோ

[கருநிறமான களங்கம்,(அது உளதென்ற நாணத்தால் ஒடுங்கிக்கிடக்காமல்) ஊரூராய்த் திரிகின்ற சந்திரனுக்கு இருக்கின்றதேஎன்று பொறாமைகொண்டு,மிகச்சிறந்தவனாகிய நீபிறந்து சூரியவமிசத்திற்கும் நிலைத்திருக்கும்ஒரு களங்கத்தை உண்டாக்கினையே]

எனச் சூரியன்மரபை நினைந்துச் சோர்கின்றான் வாலி. இறுதியாக, "வாலியையே கொன்றவன்" என்ற அவ் வீரப்புகழேனும் இராமனுக்கு வாய்க்குமாயின் தான் மாய்ந்தது வீணாகாதென்ன மதித்துப் பிறகு அதுவும் ஒல்லாதென அயர்ந்து,

மற்றொ ருத்தன்வ லிந்தறை கூவவந்
தற்ற வென்னையொ ளித்துயி ருண்டநீ
யிற்றை யிற்பிறர்க் கும்மிக லேறென
நிற்றி போலுங்கி டந்தநி லத்தரோ

[வேறொருவன் வலிய என்னைப் போருக்கு அழைக்க வந்து சேர்ந்த என்னை,மறைந்துநின்றுஉயிரைக்கவர்ந்தநீ, இப்பொழுது நான்விழுந்துகிடக்கின்ற இந்நிலத்தில்,மற்றவரையும் வெல்ல வெல்ல ஆற்றலுடைய ஆண்சிங்கம் போலும் நிற்கின்றாயோ.]

என மாழ்குகின்றான். மாழ்கி இராமன் செய்த இச்செய்கை இன்னதுதான்என்னக் கடைமுறை அறுதியிட்டுக் கூறுவான்போல்,

நூலி யற்கையு நுங்குலத் துந்தையர்
போலி யற்கையுஞ் சீலமும் போற்றலை
வாலி யைப்படுத் தாயலை மன்னற
வேலி யைப்படுத் தாய்விறல் வீரனே

[வலிமையுடைய வீரனே,சாஸ்திரங்களின் முறையையும் உன்குலத்துஉதித்த மூதாதையர்கள்தம் தன்மையைப் போன்ற தன்மையையும் நீ பாதுகாக்கவில்லை. இதனால் நீ வாலியை வீழ்த்தினாய் அல்லை, நிலைபெற்ற தருமத்தின் வேலியையே அழித்தாய்.]

என, இணையில்லாவோர் உயரிய உண்மையை இணையில்லா ஆழம்வாய்ந்த சொற்களால் வாலி விளம்புகின்றான். தண்டியாசிரியர் 'அரிதுணர் அவநுதி' என்னப் பாராட்டுகின்ற அவ்வணியின் அருமையையும் அமைதியையும் காணற்கு "வாலியைப்படுத்தாயலை" என்னும்இவ்வாசகத்தைப்போன்றதொன்று எக்காலஎப்பாடைக் காவியக் கடலைனத்தும் துழாவினாலும் வாய்ப்பதரிது.

அழகிய கருத்தொன்றைப் பின்னும் அழகுறச்செய்வது அணியின்தொழில். மங்கையும் அவள் பூணும் போல, ஒரு கருத்தும் அதனைப் புனைகின்ற அணியும் வேறுவேறுதல் வேண்டும். அவ்வாறாகும்போது,அழகினுக்கு அழகுசெய்ய முயன்றா ரென்னச் சீதைக்கு உமிழ்சுடர்க் கலன்கள் பூட்டிய வளவில் அவை அந்நங்கையின் உருவினை மறைப்பனவேயாகி முடிந்ததே போல், காவிய அணிகளும் தம் ஒளியால் கருத்தின் அழகினை மறைப்பனவாகவே பெரும்பாலுந் தீர்கின்றன. ஆதலாற்றான், அணிகள் பல அமைத்துப் பாடப்பெற்றிருக்கின்ற செய்யுள்கள் இயற்கைநயம் இல்லாதனவென மதிக்கப்பெறுவதும் உண்டு. ஆயினும் அதுதான், அமைத்தோர் பிழையேயன்றி அணியின் பிழையன்று.கலையின் நுட்பமானது,இஃதோர் கலைப்

பொருள் என்பதைக் காட்டாமல் இயற்கையேபோல் தோன்றும்படி சூழ்ந்தமைக்குந் திறமையிற்றானடங்கியிருக்கின்றது. உலாப்போந்த இராமனது பேரழகினைக் கண்ணுற்றமிதிலைமாதொருத்தி "கையும் மெய்யுங் காண்கிலாது, கண்டவர் உய்யும் உய்யும்" என உவந்து வியந்தவாறே, கலைப்பொருளிற் சிறந்தவை, இது "கைபுனை திறமையே அல்லது இயற்கை மெய்ம்மையோ" எனத் தேரமாட்டாமல், "கண்டவர் உய்யும் உய்யும்" என உவகைமீதூர, செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றைப் பல்லோர்படர்க்கைக்காக்குவதையும் பாராமல், வியப்பினை ஊட்டிநிற்கும். அலங்காரமும் ஓர் கலை. எவ்விடத்து இது இவ்வண்ணஞ் செய்கின்றதோ அவ்விடத்தே தனக்குரிய சிறப்பினைப் பெறுகின்றது. இந்தத் தன்மையை ஓவ்வோரணியின் திறத்திலும் காட்டியுணர்த்துதற்கு ஈதன்றிடம்; இவ் வவனுதிவரையில் அதன் அருமையை ஓர்தல் சாலும்.

உண்மையை மறுத்துப் பிறிதொன்று உரைப்பது அவனுதி ஆகும், என்பர். "வாலியைப் படுத்தாயலை மன்னற வேலியைப் படுத்தாய்" என்னும் இவ்வாசகம் அவ்விலக்கணத்தோடு சொல்லிற்குச்சொல் பொருந்தும். ஆயினும் ஒன்று; இராமன் வாலியைப்படுத்தான் என்பது நமக்கெல்லாம் உண்மையேயாதலின் அதனை மறுக்கின்றான் என்று எண்ணுகின்றோமே யொழிய, வாலிக்கு அந்நிகழ்ச்சி அத்துணை உண்மையோ வென்பது நிச்சயம் இல்லை. தன்மையிற் படர்க்கை வந்ததே அதற்குச் சான்றாகும்.இராமன், அவனது குலம் கல்வி கொற்றம் முதலியவைகளுக்கு அடுக்காத ஒரு காரியத்தைச் செய்து அதனால் மாசுற்றானே என்றவோர் எண்ணமல்லாமல் தான் வீழ்ந்து கிடக்கின்றான் என்ற நினைவோ சற்றேனும் வாலியின் மனத்தில் எழுந்ததில்லை. இதுவரையில், "என்னைக் கொன்றாயே நீ" என்ற வாசகம் வாலியின் வாயில் வரக்கண்டிலம். "இதுவென் செய்தவாறு நீ" என்று செய்தோனையும் செய்கையையுங் குறிப்பதல்லாமல் செய்யப்பட்ட தன்னை அந்நிகழ்ச்சியில் சேர்த்துக் கொண்டிலன். "இருவர்போரெதிருங்காலை...ஒருவர்மேல் ஒளித்து நின்று....வாயம்பு மருமத் தெய்தல் தருமமோ" என்று கேட்டபோதும் படர்க்கையிற்றானே பேசினன். இதுகாறும் தன்னுடைய வீழ்ச்சி, இந்நிகழ்ச்சியைச் சேர்ந்தவொரு பொருளாக மனமார மதியாத இவ்வுத்தமன் வாயாரவும் அதனையே விளம்பிவிடுகின்றான். ஆதலின் தான் வீழ்ந்தது அவனுக்கு ஒரு பொருளே யாகாதபோது, ஒரு உண்மையாவ தெங்ஙனம்! எனின் உண்மையை மறுத்தான் என்பதற்கில்லை. தயரதனைப்போல் தன் இல்லாளாற் பொல்லாங்குபட்டா னொருவன் "பெண்கொண்டேனல்லேன், ஒரு பேயே கொண்டேன்" என்பானேல் அவனறிந்த உண்மையை அவனே மறுக்கின்றபடியாகும். இங்கு வாலி உண்மையை மறந்தானாதலின் மறுப்பவனுமாகான். எனின், நாமறிந்த உண்மையை அவன் மறுத்தலே உண்மையான உண்மையெனலாகும்படி நிற்கின்ற இவ்வாசகம், தானே தனக்கு அணியென மாறிஅரிதுணர் அவனுதி யாயிற்று. இவ்வாறு நோக்குங்கால் இராமன், வாலியைப் படுத்தானலன், அவனுதியணிக்கே ஓர் புத்துயிர் தந்து எழுப்பினான் என்னல் வேண்டும்.

வாலி உண்மையை மறுத்ததிறம் இவ்வாறாக, "மன்னற வேலியைப்படுத்தாய்" என்று பிறிதொன்று உரைத்ததன் நுண்மையும் நவில்தொறும் நயம்மிகக் காட்டவல்லது.'மன்னறம்' என்பது'நிலைபெற்ற தருமம்' என்றும்பொருள்படலாம்; அல்லது,வாலியைப் படுத்தாயலைமன்' என்ன ஒழியிசை இடைச் சொல்லாக 'மன்' என்பதை அகற்றினால், 'அறம்' என்ற அளவேயும் நிற்காலம். குலம் கல்வி கொற்ற மனைய நலங்கள் அலமரும்படி இது இராமனே செய்ததால், பின்வருவோர், இச்செய்கையைத் தமக்கு மேற்கோளாகக் கொண்டு, தக்கது தகாதது என்றவோர் பாகுபாடுடைய அறத்திற் கடங்காமல், முறையல புரிந்து கெடுவார்களே என்று பிற்றைநா ளுலகத்தை நினைத்தே இன்று இவ்வாலி இரங்கி வருந்துகின்றான்.ஆதலின், இன்ன அறம் எனப் பிரிக்காமல் பொதுவுற அறத்தின் வேலியையே அவன் மனத்துள் வைத்துப் பேசியதாதல் வேண்டும் இது. இவ்வளவு தூரம் இவன் அறிந்து பேசியது; ஆயினும் அவனும் அறியாதவோர் உண்மை அதனுள் அடங்கியிருக்கின்றது. அறம், அது மன்னறமேனும் வேறெவ்வறமேனும், மக்களுக்கே யுரிய அத்தனிப்பரம் பொருளுக்கில்லை. அறமுங் கடந்து நிற்பது அக்கடவுள்; அக்கடவுள் ஒன்றினைப் புரிய இச்சித்தது; இச்சித்து மனிதனாகப் பிறந்து அச்சித்தத்தை மனிதற்குரிய அறத்தின் வேலிக்குள் அடங்கியே நிகழ்த்தவேண்டும் என்று பார்த்தது. ஈசுவரனாகச் சித்தம்வைத்துப் பின் மனிதனாக அறத்துள் ளடங்க முயன்றக்கால் முரணுடைய இவ்விரண்டு நிலைகளும் இணங்காமையால், மன்னறவேலியைப் படுத்தான் இராமன் என்பதே இச்செய்கையின் வாய்மையும் அமைதியும் ஆவது பின்னரே தெரிய நிற்கின்றதாயினும், வாலி,தெரிவதன் முன்னரே ஓராமல் உரைத்துவிடுகின்றான்.

இனி, "வாலியைப் படுத்தாய் அலை" என்பதை, "மன்னற வேலியைப் படுத்தாய்" என்பதோடு பிணைத்தாற்றான் அவனுதியாகும். அவ்வாறுஇன்றி, "வாலியைப் படுத்தாய் அலை" என்பதை மாத்திரம் தனியே கொண்டு, "என்னை யொளித் துயிருண்ட நீ வாலியைப் படுத்தாயலை" என முன்னைய செய்யுளின் கருத்தினோடு சேர்த்து நோக்குமிடத்து, "மறைந்து நின்று எய்தாயாதலால், வாலியையே வென்ற வீரன் என்று பேசிக்கொள்ளவும்வகையற்றவனாயினாய்" எனப்பொருள்படும்.

இன்னதோர் மனநிலையினனான வாலி, இறுதியாக, இராமனை நோக்கி நெட்டுயிர்ப்புவிட்டு,

தார மற்றொரு வன்கொளத் தன்கையிற்
பார வெஞ்சிலை வீரம் பழிப்பதே
நேரு மன்று மறைந்துநி ராயுதன்
மார்பி னெய்யவோ வில்லிகல் வல்லதே.

[உன்மனைவியை வேறுஒருவன் கவர்ந்துகொள்ள,உன் கையிலுள்ள பெரியகொடிய வில் இப்படி வீரப்பழி பூண்பதா. நேராகவும் வராமல், கையில் ஆயுதமும் இல்லாத

ஒருவனது மார்பில் மறைந்து நின்று எய்வதற்குத்தானோ உன் வில் வல்லதாக இருக்கின்றது]

என்று தானு மெயிறு பொடிபடத்
தின்று கான்று விழிவழித் தீயுக
வன்ற வாலி யனையன கூறினான்
வென்ற வீர வினையவை நிகழ்த்தினன்

[என்று, பற்கள் பொடியாகும்படி கடித்தும், கண்களிலிருந்து அனற்பொறி சிந்தியும் அப்பொழுது அவ்வாலி அத்தன்மையனவான வார்த்தைகளைச் சொல்லலானான். அவன்முன் நின்ற இராமன் இனி இத்தன்மையனவான வார்த்தைகளைக் கூறலானான்]

என்று கம்பர், ஏசலுற்ற வாலியின் வெம்பிய மொழிகளை முடித்து, இராமனது மறுமொழியினைத் துவக்கலாகின்றார். வாலி துவக்கிய வன்மையே சிறப்புடன் முடிக்கின்றனரேனும், இது நாம் நிகழ்த்துவதற்கு எழுந்த இழிநிலைச் சிறுமையன்று; இராமன் நலத்தே நிலைநிறுத்திக் கொண்ட நாம்தம் எழுந்த செம்மை சேர் சிறுமையாம்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

6-ம் பத்து 10-ம் தசகம்.

[552-வது பக்கத்தொடர்ச்சி]

2-ம் பாசுரம்.

கூறாய் நீறாய் நிலனாகிக்
கொடுவல் லசுரர் குலமெல்லாஞ்
சீறா வெரியுந் திருநேமி
வலவா தெய்வக் கோமானே
சேறார் சுனைதா மரைச்செந்தீ
மலருந் திருவேங் கடத்தானே
ஆறா வன்பி லடியேனுன்
னடிசேர் வண்ண மருளாயே.

பதக்குறிப்புகள்:—கொடுவல்லசுரர்-தேவர்களுக்கு எல்லாவிதமான கொடுமையை யியற்றும் அசுரர்களை, நீறாய் - சாம்பலாக்கி, நிலனாகி - இருந்த சுவடு தெரியாமல் பாழ்நிலமாக்கியும், அதுபோதாதுபோல், சீறா எரியும் - சர்ப்பம்போல் கோபத்தால் சீறிக்கொண்டு தீயை வர்ஷிக்கும், திருநேமி வலவா - வலதுகையில் சக்கராயுதத்தை ஏந்திநிற்கும் தேவராஜனே, சேறார் சுனை - சேறுற்ற வயல்களில் மலையினின்று மிறங்கும் சுனைகளில், தாமரை செந்தீ மலரும் - சிவந்த அக்கி போலச் சிவப்புநிறத்தோடு தாமரஸ புஷ்பங்கள் மலரும், திருவேங்கடத்தில் ஔஜ்வல்யத்தோடு விளங்கு மெம்பெருமானே, ஆறா - திருப்தியடையாத, அன்பில் - ஆழ்ந்த அன்பு மிகுதியில் முழுகிக்கிடக்கும், அடியேன் உன் அடிசேர்வண்ணம் கிருபை பண்ணவேணும்.

தாத்பரியம்:—முன்பாசுரத்தில் செய்த விண்ணப்பத்தையே திரும்பியும் கோருகிறாராயினும் தேவர்களுக்கு விரோதிகளை நசிப்பித்ததுபோல அடியேனின் பாவக்குவியல்களைத்தொலைத்துத் திருவடிசேர்க்கவேணும்; யானும் தேவர்கள்போல் ஆழ்ந்த பக்தனல்லனோ வென்கிறார்.

3-ம் பாசுரம்

வண்ண மருள்கொ ளணிமேக
வண்ணா மாய வம்மானே
எண்ணம் புகுந்து தித்திக்கு
மமுதே யிமையோ ரதிபதியே
தெண்ணி லருவி மணிபொன்முத்
தலைக்குந் திருவேங் கடத்தானே
அண்ணலேயுன் னடிசேர
வடியேற் காவா வென்னாயே.

அவதாரிகையும் பொழிப்புரையும்:—யாம் நிர்ஹேதுகமாகக்கிருபைபண்ணைக் கூடுமோ வென்றால், நான் பலமுறை யாசித்தும் கிருபைபண்ணாதிருக்கவே வெறுத் துன்னைவிட்டுவிலகன்றுவிடலாமென்றாலோ எவ்வளவு மறந்தாலும் உன்னிடமே ஈடுபாடுண்டாய் உன் குணங்களும் சரித்திரமும் என்னை ஆழ்வித்துத் தித்திப்பை ஊட்டி உன்னைவிட்டகலாதபடி செய்பவனாயன்றோ! இதுவரையிலும் நிர்ஹேதுவாய்ச் செய்ததுபோலவே உன்திருவடிகளையடைய நீயே மேல்விழுந்து"வா" "வா"வென்று பூர்ணமனோரதனாயழைக்க வேணு மென்கிறார்.

பதக்குறிப்புக்கள்:—வண்ணமருள் (அருளை) கிருபையே (வண்ணம்) சுபாவமாகவுடையவன். அணிமேக வண்ணா - சுந்தரமான நீலமேக சாமளனே; எண்ணம் புகுவது - என்மனதில் புகுந்து தித்திப்பவனே.

4-ம் பாசுரம்

ஆவா வென்னா துலகத்தை
யலைக்கு மசுரர் வாணாள்மேற்
றீவாய் வாளி மழைபொழிந்த
சிலையா திருமா மகள்கேள்வா
தேவா சுரர்கள் முனிக்கணங்கள்
விரும்புந் திருவேங் கடத்தானே
பூவார் கழல்க ளருவினையேன்
பொருந்து மாறு புணராயே.

இப்பாசுரத்தில் முக்கிய வேண்டுகோள் - திருமலையிலே பிராட்டியோடு நின்றருளின எம்பெருமானின் ஆனந்த மயமான திருவடிகளை (புணராய்) சேருகைக்கு எனக்காகவே நவீனமாய் ஒரு உபாயத்தை ஸங்கல்பித்துஅவ்வுபாயத்தில் என்னைமூட்டி உன்னிடத்தில் சேர்த்தருளி என்னுடைய ஸமஸ்த மனஸ்தாபங்களைப் போக்கியருளவேண்டு மென்கிறார். இவர் இப்படிப் பிரார்த்திப்பானேன். சென்ற பாசுரத்தில் எம்பெருமான் தமக்கு ஸதா பஜநத்தையும் பக்தியையும் தித்திப்பா யமைத் திருப்பவன். மேலும் முழுவதுந் தலை கட்டித் திருவடி சேர்ப்பிக்கலாம் என்று இவர் வாது கூறினதால் எம்பெருமான் "மறுமொழிஉமக்குத் தெரியும்படிசொல்ல வல்லதல்ல, நீவிர் செய்திருந்த ஒரு ஸுக்கிருதம் பற்றியே"என்றுரைத்து,"இப்போழ்து உம் வேண்டுகோளை ஏற்க ஒரு வியாஜம்வேண்டும். அதற்குப் பரிகிறுப்தமாய் விதித்துள்ளமுறைகளில் ஒன்றை அநுஷ்டிக்கலாகாதா"வென்று கேட்டதாகத்தோற்ற, அவைகளிலொன்றும் தமக்கமையவில்லை என்று வேறு சூழ்ச்சியைப் புதிதாக விதிக்கச் சொல்லி வேண்டுகிறார். இவ்விதம் இது செய்ய வல்லவனென்பதற்கு உதாஹரணம், தேவாசுர யுத்தத்திலும் ஸ்ரீராம ஸ்ரீகிருஷ்ணாவதாரத்திலும்உதப்பவித்து உலகங்களிலுள்ள ஆத்மாக்கள் வருத்தத்தை அநாதரவு செய்து அவர்களை ஒரு பயனும்இன்றி ஹிம்ஸை செய்யும் அசுரர்களின்மேல் தாமே பகவான் அம்பு மழைபெய்து தொலைத்துத் தரைப்படுத்தி உலகங்களின் துக்கங்களைப் போக்கவல்லவன் என் விபஸநத்தையும் போக்க விரகுபார்த்தருளுவான் என்கிறபடி.

பதவுரை:—ஆவாவென்னாது - பிறர் வருந்தவொண்ணாதென்று, உலகத்தை யலைக்கும்-உலகஜனங்களை ஹிம்ஸை செய்திருந்த, அசுரர், வாணாள்மேல் - ஆயுஸின்மேல்-அதாவது உயிர்கள்மேல், தீவாய் - அக்கி போன்ற, வாளிமழை - அம்புகளான பாணவருஷங்களை, பொழிந்த - இடைவிடாமல் பெய்த, சிலையா - சாரங்கமென்ற தனுஸையுடையவனே, திருமாமகள் கேள்வா - ஸ்ரீயப்தியாகஇருக்கின்றவனே,தேவர்கள், சுரர் - நற்குண நற்செய்கைகளையுடைய வானவர்கள்; முனிக்கணங்கள் - எப்போதும் பகவானையே நினைத்து வழிபட்டு மௌனம் சாதிக்கும் இருடிகளும், விரும்பும் திருவேங்கடத்தானே,பூவார் கழல்-தாமரஸம்போன்ற திருவடிகள், அருவினையேன்-வெகுவித பாவத்தைச் செய்த அடியேனை, பொருந்துமாறு - திருவடி சேருமாறு, புணராயே - ஒரு உபாயம் உபதேசித்து அதின் மூலமாய்ச் சேர்ப்பித் தருளாய்.

முக்கிய குறிப்பு:—இப்பாசுரத்தில் கோரும் பலன் தானே உடனே திருமலைப் பெருமான் திருவடியை அடையவல்ல தேஹாவஸனத்தில் வைகுண்டமேகி அங்குள்ள அமரர்திருமலைக்குக் கூட்டங்கூட்டமாய் யாத்திரை கொள்ளும்போது தானும் அவர்களுடன் தொடர்ந்து வரும் உத்ஸவத்தை உற்சாகித்துக் குறிப்பது; அருவினையேன் - திருவடிகளில் உருசிதட்டியும் அவைகளைப் பெறக்கூடாதபாவத்தைஇயற்றினவன்.

5-ம் பாசுரம்

புணரா நின்ற மரமேழன்
றெய்த வொருவில் வலவாவோ
புணரேய் நின்ற மரமிரண்டி
னடுவே போன முதல்வாவோ
திணரார் மேக மெனக்களிறு
சேருந் திருவேங் கடத்தானே
திணரார் சார்ங்கத் துன்பாதஞ்
சேர்வ தடியே னெந்நாளோ

உரை:—புணராநின்ற-ஒன்றோடொன்று நெருங்கி வெவ்வேறாகப் பிரித்தறியக்கூடாமல் தழுவிக்கொண்டிருக்கின்ற, மரமேழும் - விருக்ஷங்கள் ஏழையும், அன்று - ஸ்ரீராமாவதாரத்திலே, எய்த - ஒரே அம்பு இம்மரங்கள் எல்லாவற்றையு முருவிச் செல்லும்படி எய்த, ஒரு - ஆச்சரியமான, வில்வலவா - வில்வித்தையில் கைப்பழக்கம் முதிர்ச்சி பெற்றசிறப்புப் பொருந்தியவனே-(ஓ-ஆச்சரியத்தைச் சுட்டிச் சொன்னபடி) "புணரேய்நின்ற"என்று வந்திருப்பது, புணர்-தழுவ, ஏய்கை - பொருந்துகை - நன்றாக நெருங்கி நின்ற மரமிரண்டினடுவே - மருதமரங்க ளிரண்டின் மத்தியில், போன - தான் விளையாடும் சகடங்கள் பூணந்த வண்டியை ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில்விட்டு அம்மரங்களைத் தமக்குத் தீங்கில்லாமல் சிசுவான இளம்பிராயத்திலேயே வீழ்த்தின, முதல்வா-உலகங்களுக்கெல்லாம் காரணபூதனே! திணரார் மேகமெனக் களிறு-நன்றாய் மாம்சங்களால் பருத்த மேகங்களைப்போல் கறுத்த யானைக் கூட்டங்கள், சேர் திருவேங்கடத்தானே - உலாவி உற்சாகமாய்த்திரியும் திருவேங்கட மலையில், உம்பர் தேவதைகள் முனிகள் ஸாது மனிதர்கள் பக்தர்கள் எல்லாவரும் வந்து முறைசெய்து உய்யும்படி நித்தியவாஸம் பண்ணுகின்றவனே! திணரார் (திணர் - பெருமை) பெருமையும் இருமையும் பொருந்திய, சார்ங்கத்து- சாரங்கமென்றவில்லை, எப்போழ்து என்ன ஆபத்து எந்த நிமித்தத்தாலே தம் திருவடிகளைச் சார்ந்த பக்தர்களுக்கு நேரிடுமோ வென்று கையும்வில்லுமாய் ஸேவைகொடுக்கும் எம்பெருமானே, உன் பாதங்களில் என்னை எந்நாள் சேர்த்துக்கொள்ளப் போகிறாயென்று கேட்கிறார்.

குறிப்புக்கள்:—பக்தர்களினிடுக்கண்களைநொடியில் களைவோமென்று காட்டுவதற்காகத் திருவேங்கடத்தெம்பெருமான் பஞ்சாயுதங்களுடன் ஸேவை கொடுக்கிறார். சார்ங்கமென்ற வில்லைமாத்திர மெடுத்தது மற்றவைக்கு முபலக்ஷணம்.

II "உம்மைக் கூவிக்கொள்வோம்" ஆனாலு மதற்கு நீவிர் பகவானையடைய முயற்சிக்கவேண்டியதாய் நம்மாலும் வேதத்தாலும் ஏற்படுத்தப்பட்ட மார்க்கங்களில் ஒன்றைக்கைப்பற்றினீரானால் அதைவியாஜமாகத்தொட்டு நாம் உமக்கு அருள்புரிவோமென்று முன் பாசுரங்களில் பகவான் அருளிச்செய்தாரென ஆழ்வாருக்குத் தோன்றிற்று. சென்ற பாசுரத்தில்—"அவை எனக்கு அமையாது, புதிதாய் ஒருமார்க்கம் கற்பித்து என்னை அதன் மூலமாய்க் கைப்பற்றிக்கொள்" என்று வேண்டினார்.

III இப்பாசுரத்தில் ஆழ்வார் கூறுவது யாதென்னில்; தாம் அபேக்ஷித்தவண்ணம் பகவான் செய்யக்கூடும் - அவன் ஸர்வசக்தன் - மராமரங்கள் ஏழையும் ஒரே பாணத்தால் உருவத் துளைத்து ரஸாதலம் வரையில் இராமபாணத்தைச் செலுத்த வில்லையா? சரணாகதனான சுக்கிரீவராஜனுக்கு இவ்வண்ணம் தன் திவ்விய சக்தியைக்காட்டி அவனுடன் நேசஞ் செய்து அவனின் காரியத்தை முடிக்கவில்லையா ? ஆகையால் மார்க்கமொன்றை ஏற்படுத்தித் தனக்கு உத்தாரம் தரக்கூடு மென்கிறார்.

IV இங்கே பகுத்துரை வேண்டிய அம்சம் ஒன்றுளது. அதுயாதெனில், ஆழ்வார் பகவானைத் தத்காலம் யாசிப்பது - இப்போழ்தே தமக்கு மோக்ஷம் அளித்து வைகுண்டத்திற்குக் கூவிக்கொண்டுபோய்

அங்குத் தம்மிடம் ஸர்வ கைங்கரியமுமேற்பதுமல்லாமல் அங்குள்ள நித்திய ஸூரிகளுடன் தாமும் திருவேங்கட மலைக்கு வந்து அந்தத் திவ்விய ஸ்தலத்திலும் ஸர்வ கைங்கரியமுஞ் செய்யவேண்டுமென்று அபேக்ஷிக்கிறபடி-இப்படித் தம்வேண்டுகோளை நிறைவேற்றப் பகவானால் உடனே முடியுமாயினும் இது பயன்பட எந்நாளைக் குறிப்பிட்டிருக்கிறீரென்று பகவானைக் கேட்கிறபடி. இந்தப்பாசுரத்தினுள்கருத்து-அடுத்த பாசுரத்தால் இக்கருத்துத்தோன்றி விளங்குவதை அறியவும்.

கர்ணன் மாண்பு

[510-வது பக்கத்தொடர்ச்சி]

ஆனால் அச்செருக்கு மிதமாகவும், பிறரிடம் உலாப்போகாமல் தன்னுள் ளடங்கியுமிருந்தால் மதிப்புக்குரியதாகவே கருதப்படலாம். அப்படியிலாமையால் கர்ணனுக்கு அது இகழ்ச்சியும் ஏளனமுமே விளைப்பதாகும். வீடுமனை இவன் அடிக்கடி எதிர்த்து அவன் மனத்தைப்புண்படுத்துகிறான். உலூகன் தூதுசென்ற காலத்து, அரச சபையினில் விதுரன் 'புல் விதுடகரினும் தாழ்ந்த அமைச்சர் சொல்கேட்டு நாடு வழங்காதிருப்பின் சேனையும் சுற்றமும் கெடும்' என்றியம்பியபடியே வீடுமனும் சில சொன்னான். கன்னன், அவன் வயதையும் அதனிற் பன்மடங்கான அவன் பெருமையையும் மதியாமல், "என்ன சேவகம் கொண்டு நீ யாரையும் இகழ்ந்துரைப்பது" என்று அவனது சேவகத்திற்கோர் அவதூறு கூறுகிறான். வடமொழி பாரதம் பயின்றவர் சிலர், கன்னனை யிகழ்வதே வீடுமனுக்குச்சுபாவமாமென்பர். அது எப்படியாயினும், நமது வில்லிபாரதத்தையே இங்கு நாம் கொண்டுளோம். ஆதலின் மேலே நிகழ்ந்ததை ஆராய்ந்து, குற்றம் யாருடையதென்று காண்போம். 'புல்விதுடகரினும் தாழ்ந்த அமைச்சர்' என்று, சகுனி கன்னன் முதலியோரைத் தாக்கி மொழிந்த விதுரனுக்கு மறுமாற்றம் இயம்பாத கன்னன், வீடுமனை மாத்திரம் ஏன் அன்னவாறு இகழ்ந்துரைக்க வேண்டும்? வீடுமனது பொறுமைக் குணத்தினைநம்பியே அவனிடம் அப்படி விளையாடுகிறானே யன்றி, 'அரசனையும் நாத்துணிப்பன்' என்ற விதுரனிடம் இவன் இவ்வாறு உரையாடுதல் இயலாதென்பதை நாம் கூர்ந்து நோக்க வேண்டும். இவ்வாறே பன்னிரண்டாம்நாள் இரவு, சிலையாசிரியனை நோக்கி, 'மறையந்தணர்க்கென்ன கட்டாண்மை யுண்டு?" என்று இவன் கூறியதை முதியோராகிய அவர் பொருட்படுத்தாதிருந்தாலும், வேறோர் சமயத்தில் கிருபாசாரியனைக் கன்னன்பரிகாசம் செய்ததற்காக அசுவத்தாமனவனை நாத்துணிப்பேனென நின்றான். இவ்வாறு பெருக்கின் பெருகும்.

அப்படி அவனது விதண்டாவாதங்களை வீடுமரே சில சமயங்களில் பொறுக்கமாட்டாமல் சிதைக்கும் வண்ணம் எதிர்வாய்மை விளம்புவர். மேலே இராச சபையில் கன்னன் வீடுமனை அவ்வாறு இகழ்ந்து உரைத்ததும் அவர், "அரசனை அந்தரசரிதர் கொண்டேகாமல் தடுத்தனையடா, நரனொடும் போர் செய்தாயடா, நிரை மீட்டாயடா' என்றெல்லாம் சில ஏளனமாக உரைத்து உலூகனும் நகைக்கும்படி செய்கிறார். மற்றைச் சபையோர் அவனிடம் ஜாடையாய் நடந்து கொள்வர். ஆனால் சமயமறிந்து அவர்களும் அவனை யிகழ்ச்சிசெய்யாமலிருப்பதில்லை. மேலும் அரசனுக்குப் பிரியமான ஏவலாளனாதலின்பின்னும் அசூயை அதிகப்படுமன்றோ? நிரைமீட்சிச் சருக்கத்தில் கன்னன் பார்த்தனிடம் மும்முறையும் தோற்றுப் பின்னும் முயலும்போது அசுவத்தாமன் 'நின் போரை நிறுத்துக' என்றுகூறி அவனைக் கேலி செய்கின்றான். பதினான்காம் நாள் போரில் அசுவத்தாமனால் அடியுண்ட கடோற்கசன் பின்னும் எழும்போது, இராசராசன் கன்னனைப்பார்த்து, 'அவன் உயிரை வீட்டுக" வென்னக் கன்னன், 'சோகித்துத் தளர்ந்தவன்மேல் கணை தொடேன், நாளை யிவனைக் கொன்று, பார்த்தனையும் வென்று நினக்கு ஞாலம் தருவன்' என, அருகிருந்த கிருபாசாரியன், "இப்படிப்புகன்றிடுவை, வென்றிவிசயனைக்கண்டால் முதுகிடுவை' என்றுபரிகாசம் செய்கிறான். சகுனியும் இவனை ஏளனம்செய்யாமல் விடுகின்றிலன். சூதுபோர்ச் சருக்கத்தில், பாண்டவர்களை யொழிக்க ஆலோசனை புரிகையில், "வெஞ்சிலை குனித் தோரம்பியான்விடின் வெகுண்டவேந்தர் எஞ்சிவிண்புகுவரல்லால் யாவரே எதிர்க்கவல்லார்" என்ற சொல் இவன் வாய்கடந்த ஞான்றே, சகுனி "இப்பொழுதிருந்த வீரர் யாவரும் பாஞ்சாலி சுயம்வரத்தில் இருந்திலேமோ" என்றுரைத்துச் சபையோரை நகைக்கச் செய்கிறான்.

"மேலும் கன்னன் இங்கிதம் அறியாதவனென்றே கூறவேண்டும். யாதவன் தூதுசென்ற அன்றிரவு, துரியோதனன் சபையில், திருதராட்டிரன், அரசன் முதலியோர் கண்ணனைச் சூதால்மாய்க்க எண்ணுகையில் அறங்கூறிய விகர்ணனைத் தவிர்த்து, மற்றைச் சபையோரெல்லாம் சபையின் போக்கறிந்து வாளாவிருப்ப, அப்போக்கிற்குச் சிறிதும்தொடர்பின்றிச், "செங்கதிர் சுடரிற் சிறில் செறியிருள் நிற்பதுண்டோ, வெங்கணையொன்றினாலே விளிந்திடவென்றிகொள்வேன்" என்று இவன் கூறியதன் நோக்கமென்ன? மறுபடியும் சகுனியினின்றும் ஒரு ஏளனமான சொல்லைப் பெறவேயன்றோ?

இன்னும் விளக்குவோம். பதினேழாம்நாட் போரில் இராசராசன் எவ்வளவு பிரயாசைப்பட்டுச் சல்லியனைக் கன்னனுக்குப் பாகனாக்குவித்தான்? அதனினும் எதிரியின் பக்கலான ஒரு வீரனைத் தன்வயப்படுத்தியதன்றியும் அவனை மற்றொருவனுக்குத் தேரோட்ட இசைவித்தது எவ்வளவு சாகஸம்? அவ்வாறு அமைந்தவுடன், கன்னன்,

நாகவெம் பகழி பெற்றேன்
நாரணற் கொத்த வுன்னைப்
பாகனு மாகப் பெற்றேன்
பாக்கியம் பலித்த வாறே

மனக்குநே ரான தோழன்
மகிதல முழுது மெய்தக்
கனக்குரல் களிற்றோ யின்று
காண்டியென் னாண்மை யென்றான்

தனக்கு ஏறக்குறைய நிகரான அதிரதன் தேரோட்டுவதனால் அப்பாகனுக்கு மனதில் எவ்வளவு வருத்தமுளதென்பதையுன்னாமல், 'காண்டி யென்னாண்மை' என்று தற்பெருமை பேசி 'உன்னைப் பாகனு மாகப் பெற்றேன்' என்று மனமுவந்து கூறினானென்றால், (தான் வெற்றிக்கே யுரியோன் போலும், சல்லியன் தேரோட்டுவதற்கே யுரியவன்போலும், பொருள்படும்படி கூறினானென்றால்,) மற்றவனுக்கு அது எரியில் எண்ணெயிட்டதுபோ லாகுமன்றோ? அப்படித் திறனற்று மொழியின் அதற்கேற்ற பரிசிலையும் பெறவேவேண்டுமன்றோ? உடனே சல்லியன் இளநகை செய்து, "விசயனையொரு போதத்தும் திருவரும் வண்மையோய் நீ செயித்திடக் காண்டிலேமால்" என்று மறுமொழி கொடுத்தபோது, பின்னும் உரையைப் பெருக்காமல் மௌனமாயிருப்பதே கன்னனுக்கு நலம். ஆனாலோ, இவன் சும்மா விராமல்,

" தந்திர பாலர் முன்னர்ச்
சல்லிய விகழ்தல் வேண்டா
மந்திர வாசித் திண்டேர்
வல்லையேல் ஊர்வ தன்றி
வெந்திறல் விளைக்கும் வெம்போர்
வினைக்குநீ யார்கொல்" என்றான்.

உடனே இருவரும் கைகலந்து வாள்யுத்தம் புரியவே அதற்குள் சுயோதனன் இடைவந்து தடுக்க இருவரும்பிரிந்தனர். வடமொழி பாரதம் பயின்றவர் சிலர் 'சல்லிய சாரத்தியம்' என்று, சல்லியனைப்பற்றிக் குறை கூறுவது வழக்கம். ஆனால் மேற்கூறிய உரையாடலிற் குற்றம் யாருடையது என்பதை ஆராய்வோம். தன் விருப்பதிற்கெதிராக ஒருவனுக்குத் தேரோட்ட இசைந்தால் அவனுக்கு மனத்தாங்கல் இருப்பது இயற்கையன்றோ? அரசன்சொல்லுக்கு இணங்கி வந்தானேனும், ஏதேனும் சாக்கு வைத்துக்கொண்டு சண்டை பிடித்துப் பிரிந்துவிடுவதற்கன்றோ அவன் முயல்வான்? அச்சமயத்தில் அவனிடம் சிறிது மிகையாகவே உரையாடுதல் துப்பின்மையையன்றோ காட்டிற்றாகும்? கன்னன் செய்திருக்கவேண்டியதென்னெனில் சல்லியனிடம் அதிகமாகப் பிடிகொடுத்து உரையாடாமல், தனதுசேனாதிபத்தியம்தோன்றும்படி பலவிதமாகச் சேனைகளைப் பகுத்தும் எங்கும் தனது ஆணைகளைச் செலுத்தியும் வேறு போக்காகவேஇருந்தால், மனிதசுபாவம் காரணமின்றி நீடித்த கோபம் கொள்ளுதல் இயலாதாதலின், சல்லியனும் கன்னனிடம் அன்பும் ஆதரவும் மேலிட்டு அவனுக்குச் சிறந்த சாரத்தியம் செய்திருக்கலாம். அப்படியே பின்னர் அவன் செய்யவில்லையா? கன்னன் வீமனால் சோகித்தபோது அவனைத் தேற்றினானல்லனோ? பிறகு "விரிதுளபம் புனைமாயன் வஞ்சனையுளன்; விசயனது தடமார்பத்தில் பார்தட் பகழியைச் செலுத்துக" வென மதிகூறவில்லையா? கன்னனுக்கும் சல்லியனுக்கும் பகைமை இல்லை. சல்லியனும் வியக்குமாறு இவன் வில்வல்லபமிருந்தது. ஆதலினன்றுகாலை நேசப்பான்மை விளையாமல் சச்சரவு விளைந்தது கன்னனது திறனின்மையினாலே யாகும்.

மேற்கண்ட உரையாடலிற் சிறுநகைக்கு இடமாயதோர் விஷயமும் உண்டு.

"நாரணற்கோத்த நின்னைப் பாகனு மாகப் பெற்றேன்" என்றுஇவன்கூறியது, தான் துரியோதனனைப் போல் மிருதுவசனம் பேசவல்லவன் என்பதைக் காட்டுதற்காகவா? என்னே இவன் மதி! கன்னனது வில்வல்லபத்தைச் சுயோதனன் பெறுதலாற்றுவறே அச்சுயோதனனது மொழிவல்லபத்தையும் கண்ணனைத் தவிர யாரும் பெறுதலாற்றார். கண்ணன் அருச்சுனன் மைத்துனனாதலின் தேரோட்ட இசைந்ததற்கும், எதிரியின் கூட்டத்திலிருந்து தந்திரத்தினால் வயப்படுத்தப் பட்டு, சுயோதனனது மதுரமான இதமொழிகளுக்கே மறுக்கமாட்டாமல் இணங்கிய சல்லியனுக்கும் பேதமில்லையா? இதையறியாமல் சபையோரிடத்தே பலதரமும் அவமானப்படும் கன்னன், இதரனாகிய சல்லியனிடம் மேற்கண்டவாறு உரையாடுதல் திறனின்மையை யன்றி வேறெதைக் குறிப்பதாகும்?

சிறுநகைக்குரித்தான இடம்இதுவொன்றுமேயன்று; இன்னும் பெருக்கக்கூடும். கன்னன் சுயோதனனைப் போலத் தானும் பேச முற்படுவது நமக்குச் சில சமயத்தில் நகைவிளைவிக்கலாம். சுயோதனனது சொற்றிறனைப்பற்றி இங்கு விரிவாகஉரைப்பது மிகையென்றே நினைக்கின்றேன். அதைப் பாரதநூல் முழுவதும் கண்டுகொள்க. அரசசபையில், கண்ணனோடு நிகழ்த்திய சொற்போரினையும், சல்லியனைத் தேரோட்ட இசைவித்த உரைகளையும் மற்றும் பலவற்றையும் நினைவூட்டிக்கொள்ளலாம். முக்கியமாக இவ்விடத்து நாம் பதின்மூன்றும் நாளிரவு(அபிமன்யு இறந்தநாள்) துரியோதனனுடைய சபையினடந்ததைக் கூர்ந்து நோக்க வேண்டும். அபிமன்யு இறந்தானெனினும், தன் மகனும் இறந்தானாதலின், துரியோதனன் கலக்கத்துடனிருந்த சமயத்தில் கடோற்கசன், விருதுடை அரசன் வாயிலினின்று விளித்து உள்ளே நுழைந்து, அருச்சுனன் வஞ்சினம் கழறியதையும் கைலாயம் சென்றதையும் கூறி,

எஞ்சினன் நாளையுன் மைத்துனன்
என்றுகொள் என்றனன் வன்றிறல்கூர்
நெஞ்சினில் வேறொரு சஞ்சல
மற்றநி சாசரன் மாமருகன்

என்றவன் சிறிது கம்பீரமாகவே யுரைப்ப, இராசராசன் தன் சோகத்தையெல்லாம் மறைத்து, இளநகை செய்து,

மன்மைந்தர் பலரோடும்......மறித்தொருவர்
மீளாமல் மறித்துவீழ
என்மைந்தன் இறந்திடவும் யானொன்றும்
புகலாமல் இருக்கின்றேன்"

என்று, தான் சோகத்தைக் காட்டாமல் பெருமிதமாயிருந்ததாகப் பாவனை செய்து, "தன்மைந்தனிறந்தனனும் தான் தழலில் மூழ்குவனும் சபதம்கூறி" என்று, வெஞ்சினமும் வஞ்சினமுமாகிய பலவேறு உருவம் கொண்ட அருச்சுனனது பிள்ளைச்சோகப் பிரமாதத்

199186
82
m 211, N 28 lc N
N34, 7.24.

தை, சொற்செட்டுடன் கூடிய இரண்டடிகளில் சிதைத்துப் பின்னும் கூறுவான்.

"பயத்திர வில்நடுங்கி யரன்பருப்பதம்புக்(கு)
அவன் கொடுத்த படையும் வாங்கி,
வயத்திரத மால்கடவ வந்தெதிரே
தோற்றுவன் பார்த்தனுகில்,"

என்று அருச்சுனனது போர்ப்பிரதாபத்தைஇகழ்ச்சியுடன் வருணித்து, "மகரமோதும்,

கயத்திரவி வீழ்வதன்முன் கையறுதன்
புதல்வனைப்போல் களத்தில் மாளச்
சயத்திரதன் கொடுங்கணையால் தான்படுதல்
உறுதியெனச் சாற்றுவாயே."

என்று தனக்கு யாதும் ஆயாசமின்றிவெற்றிகிடைக்குமென்றுஇவன் கூறியவுரை தற்காலத்திய சிறந்த அரசியல் வாதிகளின் நாவிலும் தகுமென்பது மிகையாகாது. கையறுதன் புதல்வனைப்போல், என்று தனது ஆரூபையாகிய நாகவிடத்தை எவ்வளவு சில்வகையெழுத்தில் கொட்டியிருக்கிறான்! ஆனாலும் அருச்சுனனது வஞ்சினமொழிகளால் எங்கு இந்தச் சயத்திரதன் அச்சம் அடைவானோ என்று நினைத்துப் பின்னும் கூறுவான்; 'என்னினும் பார்தனக்கு உரியவன்' என்று தனது மௌலியை அப்பொழுதே எடுத்துச் சயத்திரதன் தலையில் அணிவான்போலப் புகன்று, 'சால உன்னினும் தோளுர னுடையன்; தண்டெடுத்தால் உந்தையிலும் வலியன்,' என்று சயத்திரதனை நேராகவும், கடோற்கசனையும் வீமனையும் பராமுகமாகவும் புகழ்ந்தான். ஆனால் அதன் உண்மைப் பொருள் என்னெனின், வீமன் கதைப்போர்க்குரியனென்றும், கடோற்கசன் மற்போருக்குரியனென்றும், தான் பாரரசாள்வதற்குரியனென்றும்தொனிக்கும் பொருளேயாகும். "வெகுண்ட போரில் நாளை யார் வெல்வரென நவில இயலுமோ?" என்று கூறித் தன் சொற்பொழிவினை மிடுக்காக முடித்துக்கொண்டான். அத்துடன் நின்றிருந்தால் கடோற்கசன் மறுவார்த்தையின்றித் திரும்பிப்போயிருப்பான். 'நெஞ்சினில் வேறொரு சஞ்சலமற்றவன்' என்று அவனைக் கவி கூறுவார். அதாவது அறிவியலிலும் சிறிதுகுறைந்தவன்மையுடையவனேயாவன். அருச்சுனனதுசோகத்தைப்பற்றிப் பரிகாசமாகக் கூறியஉரைகள் அவன் மனத்தில் பட்டிரா. கையறு தன்புதல்வனைப்போல் என்ற நாகத்தின் தீண்டனைய சொல் நன்றாக உரைத்திராது. அப்படி அது ஒருசிறிது உரைத்திருந்தாலும் 'உன்னிலும் தோளுரனுடையன்'என்ற புகழ்ச்சொல் அதை மறைக்கும். இவ்வுரை முடிந்தபின் கடோற்கசனுக்கு என்ன புலப்பட்டிருக்குமென்றால் தன்னைத் துரியோதனன் சாலப் புகழ்ந்தான் என்பதே. மற்ற இழிதகவான உரைகள், சபையை நீங்கிய பின்போ, அல்லது தருமரிடம் கூறும்போதோதான் அவனுக்குத் தெரியக்கூடும். ஆனால் அரசவைக்கு அணியாய் நின்றான் கன்னனன்றோ? அரசன் பேசியபின், சபையில் பேசவல்ல பேச்சுவன்மையுடையவர் வேறொருவரும் இல்லைபோலும்; கர்ணன் எழுந்து,"தாரரசன் மகன் துச்சாதனன்மகன் சல்லியன்மகன் இவர்களெல்லாரும் பட்டாலும் பெரியதன்றே. பாரரசாளுதற்கிருந்த பார்த்தன்மா மகனொருவன் பட்டானகில் ஆரரசுக்கினி யுரியார் அந்தோ" என்று சிறுபிள்ளைகளும் உணர்ந்துகொள்ளும்படி எவ்வளவு வெட்டவெளிச்சமாக உரைத்தான் காண்மின்!

பங்கிருந்த உமாபதிபால் பணிந்துவரம்
பெறச்சென்றான் பார்த்த னுகில்
கொங்கிருந்த தாராய்நின் குடைநிழற்கீழ்
இதுகாலம் கூட்டம் கூடி
யிங்கிருந்த ஏழையரே மென்செயமற்
றிருக்கின் றோம்.

என்ன, துரியோதனன் இரண்டுமூன்றடிகளில் குறிப்பாகஉணர்த்தியதை யிவன் இரண்டுபாக்களில்இயம்பியுள்ளான். துரியோதனன் சொன்னததுதான், இது; இவன்,தானாக வேறொன்றும் கூறவில்லை.ஆனால் அரசன்உரைகள் ஒழுங்காகக் கத்தரித்ததுபோன்றிருப்ப இவன் உரைகள் அரக்கனுக்குப் பொருள் புலப்படும்படி அமைந்துள்ளன.இவர்கள் இகழ்கிறார்கள்என்று கடோற்கசனுக்குத் தெரிந்தவுடனே, 'நீவிரெல்லீரும் சேர்ந்து ஒரு பாலகனுக்கு ஆற்றாமல் போனீர்; இப்பொழுதே பாடிவீ டழலூட்டுவேன்' என்றான். அரச சபையின் மிடுக்கும் குறைந்தது. அம்மிடுக்கைக் காப்பாற்றத் துரியோதனன், 'இருக்குமெழிலவைக் கேற்காமல் கூறும் அரக்கிமகனுடன் ஒன்றும் கழறுதீர்' என்றான். ஆனால் கடோற்கசன் 'அரக்கர் செந்தழல் வாழ்மனை கொளுவார்; செய்ந்நன்றி கொன்றறியார்' என்றுரைத்து அரச சபையின் எழிலைச் சிதைத்து, 'குறித்த வீரன் உயிர் தப்பாது' என்றுரைத்து வெற்றியுடன் மீண்டான்.

மேலே துரியோதனன், தான் பாரரசாள உரியோனென்றும், வீமன் கதைப்போருக்கு உரியோனென்றும், கடோற்கசன் மற்போருக்கு உரியோனென்றும் கூறினான் அல்லனோ? அதுவே வழியாக அக்கன்னனும் 'தான் வெல்வதற்குரியனென்றும் சல்லியன் தோரோட்ட உரியன் என்றும்' பொருள்படும்படி கூறினனல்லனோ? இதுதான் கன்னன் சுயோதனனைப் பார்த்துப் பேசக்கற்கும் முறை. இத்திறன் எப்படி ?

பாரதத்தை நுனிப்புல் மேய்வதுபோல் படித்தவர்களுக்கு, கன்னன்வாழ்க்கை விரதமும் வண்மையும் இரக்கமும் உருக்கமுமே வாய்ந்ததொன்றாகத் தோற்றுமன்றி, ஊன்றிப் படிப்போர்க்கே, கன்னன் வாழ்க்கையில் நகைக்குரிய பல விஷயங்கள் இருக்கின்றனவென்பது வெளியாகும்.

இதுவரையில் கூறியது போதாதெனின், கன்னன் இறுமாப்பினை விளக்க ஒன்று கூறி இப்பகுதியை முடிக்கிறேன். தனக்கு அதிரதப்பதவி அளிக்காததனால் கன்னன் கங்கை மைந்தனுடன் சீறி, நீ யுயிர்மாளுமளவும் யான் படைதொடேன் என்ன நின்றான். ஒன்பது நாள் வரையில் பகையை வெல்லக்காணாததால், துரியோதனன் கன்னனை அணுகிப் போர்செய்யச்சொன்னதற்குக் கன்னன்பதிலிறுத்தான்.'வீடுமன்,

"விற்கவ்வு வாளி அடலைவர் மீது
விடலஞ்சி வீரர்எதிரே
புற்கவ்வு மாகில் விரைவோடு கங்குல்
புலராமுன் வந்து பொருவன்"

என்றிவன் கூறியதினின்றும் இவனதுஇறுமாப்பினை நன்கு கண்டுகொள்ளலாம். (தொடரும்)

இரவீந்திரநாதர் கட்டுரைகள்

தபோவனம்

[558-பக்கத் தொடர்ச்சி]

மனிதனது அறிவானது முழு மூர்க்கத்தினின்று விலகியிருக்கின்றதோ என்பதற்குஓர் அடையாளம் வேண்டுமாயின், அவன் விக்ஞான சாஸ்திரங்களின் உதவியைக்கொண்டு உலகத்தின் நியமங்களை எவ்வளவுதேர்ந்துகொண்டிருக்கின்றான்என்பதையே அந்த அடையாளமாகக் கருதவேண்டும். இந்நியமத்தின் தன்மையைத் தெரிந்துகொள்ளும்வரையில் ஒருவன் தன் ஞானத்தின் சக்தியைப் பூரணமாக அடைந்துகொண்டதாகஎண்ணுவதோ ஒருபோதுமியலாது. அதன் வரையில, உலகத்திற்கும் அதனை அறிவதற்குரிய அறிவிற்கும் சம்பந்தமில்லை. அப்பொழுது இவ்வறிவானது இந்த விச்வசராசரங்களிலிருந்து வேறாகப் பிரிந்திருக்கும். அந்த நிலையில், இந்நியமங்கள் தனக்குள்ளே மாத்திரம் அடங்கியிருந்ததாக எண்ணுமேயொழிய இவ்விச்வமெல்லாம் பரந்திருக்குந் தன்மையை அறிவானது எண்ணாது. மனிதன் தன்னைப் பிரித்து உணர்கின்ற அறிவினை உடையவனாயிருத்தலால் எப்பொழுதும் இவ்வுலகத்திலிருந்து தன்னை யோர் உலகப்பிரஷ்டன் போலவே கருதிநடப்பவனாயினன். இப்பொழுது, அணுவிற்குள் அணுவிலிருந்து அண்டத்தின் பெரிய அண்டங்கள்வரையிலும் யாவற்றையும் அறிந்து அவைகளோடு தனக்குள்ள ஒற்றுமையைத் தெரிந்துகொள்ளக்கூடியவனாக இருக்கின்றான்; இதுவே இக்கால விக்ஞான சாஸ்திரங்களின் சாதனை. ஆயினும் இதற்கு நெடுங்காலத்திற்கு முன்னரே இப்பாரத நாடானது, இவ் விச்வப் பிரகிருதியுடன் தன் சித்தத்தின் ஒற்றுமையையும் தன் ஆன்மாவின் ஒற்றுமையையுங் கண்டுகொண்டிருந்தது. இதுவே இதன் சாதனையாம்; இத்தகைய ஐக்கியமே பூரணமான ஐக்கியமாம். இது அறிவின் ஐக்கியமாக மாத்திரம் நில்லாமல் உணர்வினது ஐக்கியமும் ஆயிற்று. இந்திரியம் சிறந்ததென்றும், அவ்விந்திரியத்திலும் மனது சிறந்ததென்றும், மனத்தில் சிறந்தது புத்தியென்றும், அப்புத்தியிலும் சிறந்தது கடவுளென்றும் பகவத் கீதையில் கூறப்பட்டிருக்கின்றது. விச்வப் பிரகிருதியுடன் நமது ஐக்கியம் ஏற்படுவதற்கு உதவியாயிருத்தலால் இந்திரியம் சிறந்ததென்று கருதப்படும்.ஆயினும்அந்த ஒற்றுமை ஒரு பாகத்துடன் மட்டுமே கொண்ட ஒற்றுமையாகும். மனத்தின் மூலமாகவே ஞானரூபியாகிய கடவுளுடன் ஐக்கிய மடையக் கூடுமாகையால், மனமானது இந்திரியத்திலும் சிறந்ததென்று கருதப்படுகின்றது. ஆயினும், அறிவே, பிரிவினை முழுவதையும் அகற்றிவிடும் என்று கொள்வதற்கில்லை. அறிவைக்காட்டிலும் மெய்யுணர்வின் மூலமாகவே நாம் கடவுளை அடையக்கூடும். அதுவேதான் பூரணமாக அடைந்ததாம். இந்தப் பிரபஞ்சத்தின்மத்தியில்அனைத்திலும் சிறந்ததாகிய கடவுளைப் பூரணமாக அடையும் வழி இதுவே. யாதினும் சிறந்த கடவுளைச் சகல சராசரங்களினிடையிலும் மெய்யுணர்வினால் காட்சி கொண்டு அடையும் இதுவே இப் பாரதநாட்டின் சாதனை.

இதுவே ஒவ்வொருவனும் அடையவேண்டிய சாதனை என்பதை ஏற்றுக்கொள்வோமாயின், பிறகு, வித்தியாசாலைகளில் கல்வி ஆரம்பம் ஆவதிலிருந்து இந்த ஐக்கியத்தை இலக்காகக்கொண்டு, இந்திரியப் பயிற்சியும் அறிவின் தேர்ச்சியும் மாத்திரமல்லாமல் மெய்யுணர்வின் வளர்ச்சிக்கு உரியனவும் செய்யப்படவேண்டுவதன் அவசியத்தை மறவாமல் நாம் எப்பொழுதும் மனத்திற்கொள்ளவேண்டும். ஆகையால், பரிக்ஷைகளில் தேர்வதற்கும் தொழிற்சாலைகளில் தம் திறமையைக் காட்டுவதற்கும் அல்லாமல், மெய்க்கல்வியானது தவ வனத்தின் சாதனையாக இருக்கவேண்டும்.—பிரகிருதியுடன் ஒற்றுமைப்பட்டுத் தவத்தின் மூலமாகப் பரிசுத்தமானதாம் மெய்க்கல்வியின் இச்சாதனை.இன்றும்நம்பள்ளிக்கூடங்களிலும்கலாசாலைகளிலும் ஒருவகைத் தவம்நடைபெறுகின்றது. ஆயினும் இது மனத்தின் தவம் ஆகலாம், அறிவின்தவம் ஆகலாம், மற்று, மெய்யுணர்வின் நற்றவமோ ஒருபோதுமாகாது. அறிவின் முதிர்ச்சியால் மனமானது பலவிதஇடையூறுகளிலிருந்து விடுபடவேண்டியது அவசியம். நமது மனத்தைத் தொன்றுதொட்டு ஒரேநெறியில் செலுத்திவைக்கும் பழையவழக்கங்களை மெல்லமெல்ல அகற்றவேண்டும். சமீபத்தில் இருப்பது பெரியதாகவும் தூரத்தில்இருப்பது சிறியதாகவுந்தோன்றும்; நமக்குப் புறத்தே இருப்பது முக்கியமாகவும் அகத்தேஇருப்பது பொருளற்றதுபோன்றும் தோன்றும்; பகுதி பகுதியாகப் பிரித்துப் பார்க்குங்கால் அர்த்தமற்றதாகத் தோன்றுகின்ற வொன்று முழுமையாய்ப் பார்க்குங்கால் பொருளுடையதாகவுந் தோன்றும்; ஒருவன் ஒன்றினை அதற்குரிய தாராதரத்தினிற் கேற்றவாறு பார்த்து மதிப்பதற்குதவியாகவல்ல கல்வியே கற்பித்தல் வேண்டும்.

மெய்யுணர்வின்சாதனைக்கு இடையூறாயிருப்பவை காமக்குரோதாதிகள். இந்தக் காமக் குரோதாதிகள் அடங்காமல் அளவுகடந்து கிளருமானால் மனிதனதறிவுநிலை தளர்வெய்தி மெய்யுணர்வு கெட்டழிந்து விடுகின்றது. காமத்தின் தூண்டுதலால் ஒருபொருளை வேண்டும்போது, அப்பொருள் மிகவும் சிறப்புடையதாகத் தோன்றுவது, உண்மையில் அப்பொருளில் உள்ள எந்தச் சிறப்பினாலும் அன்று; இவன் உள்ளத்தில் இருக்கும் காமமே அப்பொருளை மிகவும் சிறப்புடையதாக இவனுக்குத் தோற்றுவிக்கின்றது. அவ்விதமே, கொடுக்காமல் நாம் ஒருபொருளைக் காக்கின்றோமெனில், அது உண்மையில் அப்பொருளின் சிறப்பினாலன்று; நம்உள்ளத்திருக்கும்உலோபமே அதற்குக் காரணம். ஆகையால், புலனை அடக்கி மெய்யுணர்வானது இடையூறுகளைக் கடந்து பூரணமாவதற்கு உரிய கல்வியைப் பிரமச்சாரிகள் பெறவேண்டுமென்பது மிகவும் அவசியம். போகக்களியாட்டங்களிலிருந்து அவன் மனம் விடுதலையடைய வேண்டும். சம்சாரக் கவலைகளும் உலகவிசாரங்களும் இல்லாமல் அவனுடையமனது அதற்கு இயற்கையான தூய்மையுடன் வளர்ந்துவர வேண்டும்.

உயிருள்ள சாதனைகள் நடைபெற இருக்குமிடத்தில்தான் வாழ்க்கையானது இலகுவாகவும் புனிதமாயும் இருக்கும். அங்கே சமாஜ சம்ஸ்க்காரங்களின் பிரிவினைகள் காணமாட்டா. தானென்றும் தன் சாதியென்றுங் கருதுகின்ற மனமானது எங்கு அடக்கப்பெற்றிருந்ததோ அவ்விடத்தேதான் பாரதநாடு தன்

சிறப்பான வித்தையைக் கற்றுக் கொடுப்பதாக இருந்தது.

ஆயினும், இதனை மனக்கோட்டை கட்டுகிறவோர் உற்சாகமே யென்றும், காரியசாத்தியம் அல்லாததில் வைத்த வொரு வீணாசையென்றும் அனேகர் சொல்லுவார் என்பதை நான் அறிவேன். நானோ இதனை ஒருபோதும் அவ்வாறாகஏற்றுக்கொள்ளமாட்டேன். அசத்தியம் ஒருபோதும் சத்தியமாக முடியாது. மற்று, சத்தியமானதெல்லாம்சாதிக்கக்கூடியவைகளே. ஆயினும், அது எளிதில் அடையக்கூடாததாக இருக்கலாம்; ஆகையால் முயற்சிசெய்து அதனைச் சாதித்தல் வேண்டும். உண்மையாகச் சத்தியத்தின்பால் ஊக்கம் கொள்ளவேண்டியதே நாம் செய்யவேண்டிய முதற் காரியம். பணம் நமக்கு மிகவும் அவசியமாக வேண்டியிருக்கும்போது, அதைச் சம்பாதிப்பது கஷ்டமான காரியம் என்று தடைகூறி நாடாமல் இருந்து விடுவதில்லை. அப்படியே, இப் பாரத நாடானது, மெய்யுணர்வே யாதினும் அவசியமென்ற நம்பிக்கையில் ஊக்கம் வைத்திருந்ததாதலால், அது அடைய இயலாததொன்றென்று மதித்து அதனை அடைதற்குரிய வித்தைகளைக் கைக்கொள்ளாமல் எளிதில் தள்ளிவிடவில்லை. இந்த நம்பிக்கையுடன் ஏற்றுக்கொண்ட முயற்சியானது தானே தனக்குச் சத்தியமாகிவிட்டது.

தம்தேசத்தின் அந்தச் சத்தியத்தில் ஜனங்களுக்கு ஊக்கமானது பிறந்து வளருவதனால், பின் எத்துணை பெரிய இடையூறுகள் கிடந்தாலும் அவ்வளவும் நீங்கிப் பாதையானது தானே எளிதாகிவிடும்.

தற்காலம், இவ்வகைச் சத்தியத்தின் சாதனையை எய்துவிக்கக்கூடிய வித்தியாசாலைகள் அனேகம் தோன்றும் என்று நான் நம்பவில்லை. ஆயினும், இவ்வகைக்கல்வியே எங்கும் பரவவேண்டும் என்னும் எண்ணம் இப்பொழுது உதித்திருக்கின்றபடியால் அந்தக் கல்வி எத்தகையதாக இருத்தல்வேண்டும் என்பதைத் தெளிந்து அறிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியமாம். பல்வேறு மாறுபாடுகளுக்கிடையே பலவேறுவகையான கல்விமுறைகள் நடமாடும் இக்காலத்தில், இந்தியக் கல்வி எய்தவேண்டிய குறிக்கோளைப் பற்றிய எவ்வித ஐயமும் இருத்தல் ஆகாது.

சூளாமணி

[550-வது பக்கத்தொடர்ச்சி]

குமாரகாலச் சருக்கம்.

அரசன் இவ்வாறு வரவேற்கவும், உழைநின்றார் வந்தவர்க் குலகமுறைப்படி வழிபாடுசெய்ய வருகின்றனர். அடக்கமே ஒழுக்கமாகக்கொண்ட இப்பெரியார் அவற்றையெல்லாம் தடுத்துவிடுகின்றனர். அரசனதுகுறிப்பறிந்து அமர்கின்றார். குணக்குன்றேயனைய அவ்வறிவனார் உலகங்கள் முழுவதிலும் மூன்று காலங்களிலும்நிகழ்வனவற்றை மனத்தேகாண்கின்ற இவ் ஆற்றலைப்பெறத் தாம் கற்றநூல் அறிவினுண்மையை, அவ்வரசனும் அறிந்து பயனடையுமாறு அவனுக்கு விளக்க எண்ணிப் பேசத்தொடங்குகிறார்.

இவருக்கும் அவ்வரசன், அரசெனும் யானையின் பெருந் தலைமீது பொலிவதாகவே தோன்றுகின்றான். "அரச! நீநேற்றிரவு ஓர் கனாக் கண்டதுண்டு. விரும்பி அதனை ஆராயுமிடத்து ஈதேயாம். வானிடத்தே இருந்து ஓர் யானை இழிந்தது. வெண்டாமரையால் கட்டிய விளங்கொளி மாலையொடும்வந்தது. பெருங்கடல் போன்ற திருமேனியுடைய கரியநம்பியைக் கண்டது. அம்மாலையைச் சூட்டியது. பின்னே, தன்னிடத்திற்குப் போய்விட்டது. ஈதன்றோ அக்கனவு."

"அரச செல்வம் நிலைபெற்று மகிழ அகன்ற மார்பனே, அக்கனாக் கண்டதன் பயனையும் கேட்டருள்க. நல்ல அழகும் மணமும் உள்ள பூக்கள் இவன் வடிவிற்பட்டதும் முன்னினும் ஒளிபெற்று விளங்கும் மாலையைச்சூடி, அவ்வாறு அழகொடு இன்பத்திற் பொலியும் கரியநம்பியின் பெயரைப் புகழ்ந்துகொண்டே விஞ்சையர் அரசன் ஒருவன் வருவான். அவன் செல்வத்திற்சிறந்தவன், மின்னெனப்பரவி ஒளிவீசும் பல பூண்களால் சிறந்து ஒளிர்பவன்: ஒப்பிலாதவன். அத்தகையவன், தன் சிறப்பிற்கும் செல்வத்திற்கும் ஏற்பச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த ஒரேஒரு பெண்ணைக் கரியநம்பிக்குத்தந்துவிட்டுப்போவான். விண்ணிழியானையே விண்ணிழி விஞ்சையன்; வெண்மாலை மகள்; மாலைசூட்டல் மணத்தல்; ஈதே அக்கனவின் பயன்" என்று விளக்கினார், அவ்வறிவனார்.

மேலும் இது அரசனதுமனதிற் படும்படியாக வற்புறுத்திக் கூறுகின்றார். "தேன்றுளி சிந்தி நறுமணங் கமழும் குவளைமாலை யணிந்து அறவழிவரும் இன்பத்தே உயர்ந்தாய். உறுதிப்பாடுடைய வில்லையுமேந்தி அறவழிவரும் பொருளிலும் உயர்ந்தாய்! ஏழுநாள்கள் சென்றதும், புட்பமாகாண்டம் என்னும் உன்னுடைய பொழிலகத்தே, எல்லாவற்றையும் விளக்கவல்ல தூதன் ஒருவன் திருவோலையோடும் வந்து இழிவான். அப்போது யான் கூறியதன் உண்மையைத் தெளிக" என்று கூறி முடிக்கின்றார்.

அங்கிருந்த உழையவர் இதனைக்கேட்டு வியந்து, தாம் கரியநம்பியை நேரிற்கண்டறிந்தவற்றை நோக்கி அரசனிடம், "உன்னருளால் ஒன்றாகிய உலகத்தையெல்லாம் ஒரு குடைநிழற்கீழ்க் காத்தலாலே பெற்ற இன்பத்திற் கறிகுறியாக யாம் காணப் பொன்மாலை பூண்டமார்பனே, போற்றி; மற்றையோரினும் உயர்ந்தோன் என்பதை அவனிட்ட பொட்டும் அணிந்த மாலையுமே காட்ட வீற்றிருந்து விளையாடும் திவிட்டனும் கரியநம்பி, இவ்வறிவனார் கூறிய பெருஞ்செல்வஞ் சேரத்தக்கவனே. ஆதலின் இவர் கூறியது பொய்யன்று" என்று எடுத்துரைக்கின்றனர்.

இவ்வாறு ஒருநாழிகைவரையில் இவர்கள் எல்லாம் அறிவுநிறைந்த உரைகளைக் கூறி நிற்ப, நாளோலக்கம் முடிதலைக் குறிக்கும் முரசு முழங்குகின்றது. அரசன் அங்கிருந்து போய் ஆராய்ச்சிமன்றத்தை அடைகிறான். போகும்போதே அரசநூலைக்கற்றுத் தம் மனத்தே அடக்கிவைத்திருப்பாருள், யார்யார் அங்கு வரவேண்டுமென்பதை அவர்களைப்பார்க்கும்பார்வையாலேயே தெரிவித்துப்போகிறான்.

ஆராய்ச்சிமன்றத்தே எல்லோரும்வந்து கூடியதும்,

ஆழ எண்ணும்முகத்தோடு கீழே நோக்கி நின்று இரவிலே தான்கண்டகனவை அவ்வறிவனார் தம் மனதிலேயே கண்டு கூறியதையும், அதன்நற்பயனென வகுத்துக் கூறியதையும் எடுத்துக் கூறித் தேன்பெருகும் மாலையணிந் தியற்கையோடியைய இன்பந் துய்க்கும் அவ்வரசன், "நீங்கள் என்னநினைக்கின்றீர்கள், என்ன செய்யவேண்டுவது இப்போது" என்று அவர்களைக் கேட்பான்போலத் தன்றலையை உயர்த்துகிறான். அவ்வாறு தலையைத்தூக்கும்அசைவாலே கொய்ம்மலர்த் தொங்கலால் நெடுமுடி மின்னிப்பொலிகின்றது.

"கடலால் சூழப்பட்ட உலகனைத்தும் புறத்தே துன்பவெயிலில் வெதும்பியலைந்த நிலைநீங்கிக் கரியநம்பியின் திருவடியைத்தொழுது அத்திருவடியினிழலில் வந்து முறையே தங்கித் தம் கவலையெல்லாம் மறந்து துன்பமின்றித் தம் சுமையெல்லாம் அவன் சுமையாகத் தம்மையும்மறந்து முனைப்பற்று இன்பத்தேமூழ்குவர். அத்தகைய தன்மையான் அத்திவிட்டன். அவன், மன்னவர் மன்னனாய் ஆழியங் கிழவன் எனப் புகழ்பெற்று விளங்குவான்; இத்தகைய தோளாற்றலை அவனுக்குத் தந்துதவிய வலிய தோளுடை யண்ணலே! இவ்வாறுமுன்னரும் திவிட்டனைக்கண்டோர் கூறக் கேட்டிருக்கிறோம் அன்றோ" என்று நினைப்பூட்டுகின்றனர் அவ்வமைச்சர்கள். "கண்படுக்கும்" என்பதற்கு உலகனைத்தும் தூங்கிச் சோம்பும், என்பதன்று பொருள். "கடவுள் அருள்பெற்றவர்கள் ஆண்டவனடியில் கண்படுப்பர்" என்பதற்கு அவ்வாறு பொருளில்லையே. தூக்கத்தில் வரும் இன்பமே பேரின்பத்திற்கும்இணையாகச் சொல்லப்படுவதறிக. தூக்கத்தே அறியாமையுண்டு. கடவுளின்பத்தே அறிவு விளக்கமுண்டு. ஆதலின், பின்னதை "நனவிற்றுயில்" என்றும் "அறிதுயில்" என்றும் கூறுவர். அத்தகைய உயர்ந்த "அறிதுயிலில்" அமர்வர் என்றதே இதன்பொருளாகக் கொள்க.

தனது மகனது ஆக்கத்தைக் கேட்டு அகமகிழ்வதால் அரசனுடைய திருமேனி ஒளிவிடுகின்றது. அவ்வொளியால் பிறரைவென்று திகழ்கின்றான். அவன் அணிந்த பூண்களினின்று போந்த ஒளியொடு அவன் திருமேனியினின்றும் சுடரொளி போந்து மின்னிப் பொலிகிறது. அவ்வரசன் தன் பிள்ளையின் ஆக்கத்திலையமில்லை என்ன உறுதியாக உணர விரும்புகின்றான் என்றும் அதற்காவன செய்யத் தம்மொடுஆராய்கின்றான் என்றும் அவன் குறிப்பை யறிந்துகொண்டு, அதன்படி நற்சூழ்ச்சிக் கிழவர்கள் "நம்பி நற்றவமுடையனே" என்று உறுதி கூறத்தொடங்கி அதற்கேற்ற சான்றுகளை எடுத்துக் காட்டுகின்றனர். ("அரசன் குறிப்பினை அறிந்து" என்றது, திவிட்டனின்உடற்குறிகளை நூலின்வழியே ஆராய்ந்தறிந்து அந்தக் குறிகள் மன்னர் மன்னர்க்கே உரியவை என உணர்ந்து" என்றும் பொருள் கூறலாம்.)

"ஐயனும் திவிட்டற்குச் சங்க ரேகையும் சக்ரலேகையும்அங்கையுள்ளன. ஆதலின் சங்கபாணியாம்திருமாலாம் இவன், சக்கிராயுத மங்கையேந்தி மன்னர் மன்னனும் என்று அறையவும்வேண்டுமோ. வளைவரியும் ஆழிவரையும் வளையாழி யேந்தும் திருமாலின் கையில் தான் உள்ளன; அவைஇவனுடைய கையில் காணப்படுதலால் அவனேஇவனென்பதில்ஐயமில்லை. ஆதலின் அவனேபோல இவனும் உலகனைத்தையும் ஆளுமன்றோ. உள்ளங்கை நெல்லிக்கனியாய் விளங்குவதனை விரித்துரைத்து விளக்க வேண்டுமோ" என வற்புறுத்துகின்றனர்.

விஞ்சையர் நாட்டரசன் மகள், வஞ்சிக்கொடியைப் போன்ற இடையோடும் மயிலன்ன சாயலோடும் ஒரு குறைவின்றி உலகம்காண மெல்ல நடந்து, வானினின்றிழிந்து இவனைச் சேருமேல், மேலுலகம் விரும்பித் தழுவும் இக்காட்சியைக் கண்டு நின்ற இவ்வுலகினர், மிகமிக வியந்து 'இவனோர் கடவுளே' என அன்பொடு அஞ்சி நிற்க, அதனால் இவ்வுலகாட்சி ஓர் இடையூறுமின்றி இனிது நடைபெறுமன்றோ." என்று திவிட்டனது ஆக்கத்தா லுலகிற்கு வரப்போகும் இன்பத்தையும் அவ்வின்பமே நாட்டமாகவுள்ள மன்னனுக்கு எடுத்துக் கூறுகின்றனர்.

மேலே செய்ய வேண்டுவதைக் கூறத்தொடங்கி "ஆதலினால், அவ்வறிவனார் கூறிய இன்றைக்கேழாம் நாளில் அழகிய அந்தப் புஷ்பமாகாண்டமென்னும் பொழிலிலே, பூந்தேன் சிந்திக்கிடக்கும் கல்மேடை ஒன்றைத் திருத்தம்பெற விளங்கச்செய்து, தூமருகாந்தனை அங்குக் காவல் வைப்போமாக! ஈதே நாம் செயற்பாலது. கடவுளாந் திவிட்டனைப் பெற்றெடுத்து உதவிய நீயும் கடவுளே யன்றோ. அதற்கேற்ப நீயணிந்த மாலையும் தூய்மைமிகக் கடவுண்மணமிக்குப் பொலிகின்றதன்றோ" என்று முடிக்கின்றனர்.

இவ்வாறு கூறியதும், அரசன் அது கேட்டதன் பயனாக முன்னிலும் தன் பூண்கள் ஒளிபெற வீற்றிருந்து, "நீங்கள் கூறியது பெரிதும் நன்று" என்றருளி "நாள்தோறும் அத் தூமகாந்தன் அப்பொழிலைச் சென்று காக்க" எனக் கட்டளையிட்டு, மனைவியரிடம் சேர்கிறான். தனக்கு இன்றுணைவராகித் தம் மனமோடொத்துத் தானேயாகி உருவில் மட்டுந் தேங்குழல் சுமக்கும் பெண்ணுருப் பெற்ற அம்மனைவியர்க்கும் இவ்வின்பம் ஊட்டுவான், அவர் வாழும் திருக்கோயிலினுள்ளே நுழைகிறான்.

இவ்வின்பத்தாலே எரியே போல எங்கும் விரிந்த ஒளி விளங்கிப் பல பூண்களோடு திகழும் அரசனுடைய திருவடியைத் தொழுது செலவுபெற்றுச் செல்கின்ற தூமகாந்தனும், பின்னே வரிகள் விளங்கும் தேன்வண்டுகள் இனிதே பாடிச் சுழலும் நீண்ட கிளைகளிலே பூக்கள் தேனைச் சொரிகின்ற அப்புஷ்பமாகாண்டம் எனும் பொழிலிலே அவ்விஞ்சையனை எதிர்பார்த்து நிற்குமாறு காவல்காக்கப் புகுகின்றான்.

குமாரகாலச் சருக்கம் முற்றிற்று.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்), "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலகதைலம் கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) ம.ட.வி.மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ம.ட.ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்த சிற்றாமணக்கு எண்ணெய் காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேத்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

m211,n28lcw
199186

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

தாய்மாருக்குப் பரிசு:—ஹங்கேரி புடாபெஸ்ட் நகரத்திற்குச் சமீபத்தில் வசிக்கும், திருமதி கிராமர் என்னும் ஒரு ஸ்திரீ 21 குழந்தைகளைப் பெற்றெடுத்தமைக்குப் பெரிதும் பாராட்டப்பட்டுச் சர்க்காரால் முதல் ரொக்கப்பரிசு கொடுக்கப்பட்டிருக்கிறார். அத்தனை குழந்தைகளைப்பெற்ற தாய் ஹங்கேரியில் வேறு யாருமில்லை யென்று சொல்லப்படுகிறது. அந்த ஸ்திரீக்கு வயது 48 ஆகிறது. அவர் தமது 16-வது வயதில் கல்யாணம் செய்துகொண்டார். வேறு 6000 தாய்மார்களுக்கும் அத் தேசத்தில் தங்கப் பதக்கங்கள் பரிசாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் 80,000 குழந்தைகளைப்பெற்ற தாய்மார்கள் பரிசு பெற்றிருக்கிறார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் சராசரி 13 குழந்தைகளைப் பெற்றிருப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றது. சந்தானவிருத்தி செய்வதில் ஹங்கேரியர்கள் தலைசிறந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

* * *

திருக்குறள் நாட்குறிப்பு:—தென்னிந்திய சைவ சித்தாந்தக் கழகத்தால் வெளியிட்டுள்ள 1935 வருடத்திய டைரி எம் பார்வைக்கு அனுப்பப் பெற்றோம். பண்டிகை நாட்கள் பஞ்சாங்கம் கோர்ட் கட்டணம் முதலியவைகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு நாள் இதழ்த் தலைப்பிலும் ஒவ்வொரு திருக்குறள் அதன் பொழிப்புரையுடன் கொடுக்கப்பட்டிருப்பது மிகவும் பாராட்டத் தக்கது. நல்ல காகிதத்தில் அழகிய கட்டிடத்தில் அமைந்திருக்கும் இந்த டைரி எல்லோர் கையிலும் இருக்கவேண்டியது அவசியம். விலை தெரியவில்லை. சென்னை, பவளக்காரத்தெரு சைவ சிந்தாந்தக் கழகத்தில் கிடைக்கும்.

பாரிசில் இருபத்தைந்து வயதுள்ள கய்னி என்னும் மாது தனது கணவன் குறிப்பிட்ட இடத்தில் குறித்த நேரத்தில் சாப்பிட வருவாரென்று நெடுநேரம் காத்திருந்தாள். கணவன் வரவில்லை. உணவுப் பொருள் பயனற்றவையாகப் போயின. அதுகண்ட அம்மாது பெருங் கோபங்கொண்டு தனது கணவன் அவனது நண்பர்களுடன் உண்டி அருந்திக்கொண்டிருந்த விடுதிக்குச் சென்று அவனைச் சுட்டுக் கொன்றுவிட்டாளாம். அவளுக்கு இரண்டு வருஷம் சிறைவாசம் ஏற்பட்டிருக்கிறது.

* * *

கன்னிகள் சங்கம்:—பாரிஸ் நகரத்தில் சந்தோஷவிவாக சபை என்ற பெயருடன் பெண்கள் சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் அங்கத்தினர் யாவரும் விவாகம் ஆகாதவர்கள். ஒரு கணவனை வரிக்குமுன் அவன் தமது மனைவியிடம் விசுவாசமா யிருப்பானா வென்று இச்சங்கத்தார் சோதிக்க ஒரு நூதனமுறையைக் கையாளுவார்கள். அதாவது- ஒருபெண் ஒரு புருஷனைக் காதலிக்கிறாள், அக்காதல் உண்மையானது தானா என்று சந்தேகமறச் சோதிப்பதற்காகமற்றப்பெண்அங்கத்தினர்மேற்படி புருஷனைக் காதலிப்பதாகப் பாசாங்கு செய்வார்கள். அவர்களுடைய வலையில் அப்புருஷன் அகப்பட்டு வேறு யாரையாவது காதலிப்பதாகத் தெரிந்தால் உடனே முதற்பெண் கலியாண உத்தேசத்தை நிறுத்திக்கொண்டுவிடுவாள். அப்படிக்கின்றி அப்பெண்ணின் வலையில்சிக்காமல் உறுதியுடன் புருஷன் இருந்தால் முன்பு காதலித்தவனிடம் உண்மையான நட்புப் பாராட்டுவதாகக் கருதப்படும்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ஞு ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தஇன்வெஸ்ட்மெண்டும்,வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.
ஹெட் ஆபீஸ்:— செம்புநாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்
இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 53வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்!! இனும்!
“இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி”
இனாமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)